வானவில்

VAANAVIL
ISSUE – 71 NOVEMBER 2016

இதழ் – 71 கார்த்திகை 2016

# ‘நல்லாட்சி’யின் நாட்கள் எண்ணப்படுகின்றனவா?




இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதியுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியடைய உள்ள சூழலில், புதிய அரசாங்கம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றத் தவறியதினால் நாடு பெரும் நெருக்கடியை எதிர்நோக்கி நிற்கிறது. அதன் காரணமாக ஆட்சியில் பங்காளிகளாக உள்ள இரண்டு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான முரண்பாடுகளும் நாளுக்கு நாள் கூர்மையடைந்து வருகின்றன.

குறிப்பாக, அரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கைகளினாலும், செயலற்ற தன்மையினாலும், பணவீக்கம் மோசமாக அதிகரித்து, விலைவாசிகள் கட்டுக்கடங்காத நிலையை எட்டியுள்ளன. இது சாதாரண மக்களின் வாங்கும் திறனை வீழ்ச்சிக்குள்ளாக்கி, அவர்களது வாழ்க்கை நிலைமையை அதளபாதாளத்தில் தள்ளியுள்ளது. இருந்தும் அரசாங்கம் நாட்டின் ஏகப்பெரும்பான்மையான சாதாரண மக்களைப் பற்றி கிஞ்சித்தும் சிந்திக்காது ‘வற்’ வரியின் மூலமும், வரவு செலவுத் திட்டத்தின் மூலமும் மக்களின் மேல் மேலும் மேலும் சுமைகளை ஏற்றி வருகிறது.

இன்னொரு பக்கத்தில் முன்னைய அரசால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் கைவிடப்பட்டதால், போருக்குப் பின்னர் வேகமாக ஏற்பட்டு வந்த வளர்ச்சி நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தேசிய வருவாயில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதுடன், வேலை வாய்ப்பின்மையும் அதிகரித்துள்ளது. இந்த உண்மையை அரசாங்கம் சமர்ப்பித்துள்ள அடுத்தாண்டுக்கான வரவு செலவுத் திட்டம் உணர்த்தி நிற்கிறது.

போர் முடிவுற்ற போதிலும் அரசாங்கம் நவீன போர்த்தளபாடங்களைத் தொடர்ந்து கொள்வனவு செய்வதிலும், பாதுகாப்புப் படைகளைப் பலப்படுத்துவதிலும் அதிக முனைப்புக் காட்டி வருகிறது. தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புத் துறைக்கே அதிகளவான, அதாவது 283.44 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில் சுகாதார அமைச்சுக்கு 160.94 பில்லியனும், கல்வி அமைச்சுக்கு 76.94 பில்லியனும் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செலவீனத்துக்கான தொகையும் 200 சதவீதத்துக்கும் மேலால் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் தினசரி செலவு 1 கோடி ரூபாவுக்கும் அதிகமானதாகும்.

அதேநேரத்தில் அரசாங்கம் நாட்டு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதில் முனைப்புக் காட்டி வருவதினால், மக்கள் மத்தியில் அரசாங்கம் மீது கடுமையான அதிருப்தி நிலவுகின்றது.

ஒருபக்கத்தில் முன்னைய அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் மீது ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வழக்குகள் தொடுத்து வரும் அரசாங்கம், மறுபக்கத்தில் மத்திய வங்கிப் பிணை முறிகளை முறைகேடாக வழங்கி பல நூறு கோடி ரூபா பணத்தைத் தவறான முறையில் தனது மருமகன் சுருட்டுவதற்கு வழிவகுத்த மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ச்சுனா மகேந்திரன் மீது இதுவரை எவ்விதமான நடவடிக்கையும் எடுக்காது காலம் கடத்தி வருவது அரசாங்கத்தின் மீது மக்களுக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது.

அதுமாத்திரமின்றி, ‘கோப்’ அறிக்கை மூலம் அர்ச்சுனா மகேந்திரன் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட பின்னரும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், அவரது ஐ.தே.கவும் மகேந்திரனைப் பாதுகாப்பதற்கு பல வழிகளிலும் முயற்சித்து வருகின்றனர். அவரது பாரிய மோசடியை முழுப் பூசனிக்காயை ஒரு கவளம் சோற்றில்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

# நூறாவது ஆண்டில் காலடி வைக்கும் சோசலிசப் புரட்சி!

**ஜார்** மன்னனின் கொடுங்கோல் ஆட்சியை வீழ்த்தி தோழர் லெனின் தலைமையிலான பாட்டாளி வர்க்க ஆட்சி நிறுவப்பட்டு நூறாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. மாபெரும் ஒக்ரோபர் அல்லது நொவம்பர் சோசலிசப் புரட்சி என வரலாற்றில் அறிவிக்கப்பட்ட ரஷ்ய புரட்சியின் நூறாவது ஆண்டானது நொவம்பர் 7ந் தேதி தொடங்கியுள்ளது. அந்தக் காலத்தில் ரஷ்யா பின்பற்றிவந்த 'ஜூலியன்' கலண்டரின்படி (Julian calendar – ஜூலியஸ் சீசரால் கிறிஸ்துவிற்கு முன் 46 ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது) 1917 ஒக்ரோபர் 25ஆம் நாள் இந்தப் புரட்சி நடைபெற்றது. இப்போது நாம் பின்பற்றுவது நவீன 'கிரிகோரி'ய கலண்டர் (Gregorian calendar – போப்பாண்டவர் 'கிரிகோரி'யால் 1582 ஆண்டில் தொடக்கி வைக்கப்பட்டது). இந்தப் புதிய கலண்டரின்படி புரட்சி நடைபெற்றது நொவம்பர் 7ந் திகதி. எனவே தற்போது இந்தப் புரட்சி, நொவம்பர் புரட்சி என்றும் அழைக்கப்படுகின்றது.

1917–ம் ஆண்டு மார்ச் மாதம் 12ந் திகதி ரஷ்யாவில் நடைபெற்ற முதல் புரட்சி, முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி எனப்படுகின்றது. இந்தப் புரட்சி ரஷ்யாவின் ஜார் மன்னன் இராணுவத்தையும் மக்களையும் முதலாம் உலகப்போரில் ஈடுபடுத்தினதால் எழுந்த விளைவுகளால் நிகழ்ந்தது. (1914ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் உலகப் போர் தொடங்கியது. 1916ம் ஆண்டு இறுதியில் ஏறத்தாழ 18 லட்சம் ரஷ்ய வீரர்கள் இந்தப் போரில் இறந்து போய்விட்டார்கள். 20 இலட்சம் வீரர்கள் எதிரிப் படைகளால் கைது செய்யப்பட்டிருந்தனர்) இப்புரட்சியில் ஜாரின் மன்னராட்சி முறை ஒடுக்கப்பட்டது. ஆனால் மக்களை ஏமாற்றிவிட்டு அரசு அதிகாரத்தை முதலாளிகள் கைப்பற்றிக் கொண்டனர். ஜாரின் மன்னராட்சியில், மன்னனுக்கு விசுவாசமாக இருந்தவர்களின் தலைமையில் தற்காலிக அரசு அமைக்கப்பட்டது. மன்னராட்சி ஒழிக்கப்பட்டு மக்களாட்சி மலர்ந்துள்ளதாக நம்பிய மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் உண்மையை லெனின் தலைமையிலான போல்ஷ்விக் கட்சியினர் விளக்கிக் கூறினர். 'எவ்வளவு நாட்களுக்கு முதலாளிகளுடைய கையில் ஆட்சியதிகாரம் இருக்கிறதோ, அவ்வளவு நாட்கள் வரையில் மக்களால் சமாதானத்தையோ, உணவையோ, நிலத்தையோ பெறமுடியாது, பூரண வெற்றியடைய இன்னொருபடி முன்னேற வேண்டும்' என்று அவர்களிடம் எடுத்துக் கூறினர். இந்தப் புரட்சி பற்றி, "முதலாளிகளுடைய பிரதிநிதிகளையும், ஏற்கனவே முதலாளிகளாக மாற்றமடைந்துவிட்ட நிலச்சுவான்தார்களின் பிரதிநிதிகளையும் கொண்ட புதிய அரசாங்கமொன்று ரஷ்யாவில் தோன்றியுள்ளது" என்று லெனின் கூறினார்.

பின்லாந்திலிருந்து இரகசியமாக லெனின் 1917 ஒக்ரோபர் 20ந் திகதி 'பெற்றோகிராட்'டிற்கு (லெனின்கிராட், சென் பீற்றர்ஸ்போர்க்) வருகிறார். போல்ஷ்விக் கட்சியின் மத்திய குழு ஒக்ரோபர் 23ந் திகதி கூடியது. அந்தக் கூட்டத்தில் சில நாட்களுக்குள் ஆயுதந் தாங்கிய எழுச்சியை ஆரம்பிப்பதென தீர்மானம் செய்யப்படுகின்றது. லெனின் வகுத்த இந்த மத்திய குழுத்தீர்மானம்,

"ரஷ்யப் புரட்சியின் சர்வதேச நிலையையும், இராணுவ நிலைமையையும் மத்திய குழு உணர்கின்றது. பாட்டாளி வர்க்கக் கட்சி சோவியத்துக்களில் பெரும்பான்மை பெற்றிருக்கிறது. இதனையும் மத்திய குழு உணர்கின்றது. இந்த சர்வதேச இராணுவ, சோவியத்துக்களில் பெரும்பான்மை முதலிய நிலைமைகளை விவசாயிகளின் எழுச்சி, நம்கட்சி மீது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் நம்பிக்கை போன்ற நிலைமைகளோடு சேர்த்துக் கவனித்தால், உடனடியாக ஆயுதந் தாங்கிப் புறப்படுவதுதான் இன்றைய வேலையாகின்றது. ஆகவே ஆயுதந் தாங்கிய எழுச்சித் தவிர்க்கமுடியாது என்பதையும், அதற்கு வேண்டிய நிலைமைகள் பக்குவப்பட்டிருக்கின்றன என்பதையும் கவனித்து, இதற்கு ஏற்றவாறு நடந்து கொள்ள வேண்டுமென்று கட்சி அமைப்புகள் யாவற்றிற்கும் மத்திய குழு கட்டளையிடுகின்றது" என்று கூறிற்று.

அப்போது போல்ஷ்விக் கட்சியின் மத்திய குழுவிலிருந்த இருவர் இந்த மத்திய குழுத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தார்கள், அவர்கள் ரஷ்யாவில் மார்ச்சில் புரட்சி நடந்து முடிந்துவிட்டதாக நம்பினார்கள். அத்தோடு 'ரொட்ஸ்கி' மத்திய குழுத் தீர்மானத்திற்கு வாக்களிக்காமலிருந்தார். நொவம்பர் 6ந் திகதி 'பெற்றோகிராட்'டில் போல்ஷ்விக் கட்சியின் தலைமைச்செயலகம் அமைந்திருந்த 'ஸ்மோல்னி'க்கு வந்து சேர்ந்த லெனின், நேரடியாக புரட்சிக்குத் தலைமை வகித்தார். நொவம்பர் 7ந் திகதி போல்ஷ்விக் கட்சியின் புரட்சிகர இராணுவ வீரர்களும் தொண்டர்களும் சேர்ந்து ரயில் நிலையம், தபால், தந்தி அலுவலகங்கள், தற்காலிக அரசு மந்திரிகளின் செயலகங்கள், அரச வங்கிகள் முதலியவற்றைக் கைப்பற்றினர். தற்காலிக அரசு ஜார் மன்னனின் குளிர்கால அரண்மனைக்குள் ஓடி ஒளிந்து கொண்டது. புரட்சிகரப்படையினர் அந்த அரண்மனையைத் தாக்கிக் கைப்பற்றி, தற்காலிக அரசின் பிரதிநிதிகளைக் கைது செய்தனர். கட்சிக்குள் இருந்து கொண்டு சோசலிசப் புரட்சிக்கு முட்டுக்கட்டை போட முயன்ற சகல முயற்சிகளையும் முறியடித்து மிகவும் கடினமான காரியத்தை அன்று போல்ஷ்விக் கட்சி நடைமுறையில் சாதித்துக் காட்டியது.

1917ம் ஆண்டு மார்ச்சிலிருந்து நொவம்பர் வரையில் ரஷ்யாவில் போல்ஷ்விக்குகளின் புரட்சிகரச் செயற்பாடு தற்காலிக அரசைத் தூக்கியெறிந்தது. இது முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சிக்கான முன்மாதிரியை உலகத் தொழிலாளி வர்க்கத்திற்கு வழங்கியுள்ளது. முதலாளித்துவ அமைப்பு உலக மக்களுக்கு, வெல்லப்படமுடியாதது என்ற எண்ணமே இருந்தது. அப்படிப்பட்ட முதலாளித்துவ சமுதாயத்தைக்கூட, தூக்கி எறிய முடியும் என்றும், தொழிலாளி வர்க்கத்தினுடைய தலைமையில் ஓர் ஆட்சியை நிறுவிக்கொள்ள முடியும் என்றும், உலக மக்களுக்கு ஒரு நம்பிக்கையை ரஷ்யாவின் நவம்பர் புரட்சி ஊட்டியுள்ளது. அதனால்தான் உலகமெங்கிலும் இன்று போராடி வரும் உழைக்கும் மக்களுக்கு, ஓர் ஒளிவிளக்கு போல, ரஷ்யாவில் நடந்த போல்ஷ்விக் புரட்சி தோற்றமளித்து வருகின்றது. அத்துடன் நிலமற்ற, ஏழை விவசாயிகள் உட்பட, அனைத்து உழைக்கும் மக்களுக்கும், தொழிற்சாலை பணிகளுக்கு செல்லும் தொழிலாளி வர்க்கம் தலைமை தாங்கி, சமுதாய அமைப்பையே மாற்றியமைக்க முடியும் என்ற புதிய உண்மையை புரிய வைத்தது, 1917ன் நொவம்பர் புரட்சி.யை வாழ்த்திக் கொண்டாடுவோம்!

---

**வானவில்**

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.

# பலஸ்தீன மக்களுக்கு ‘நல்லாட்சி’ அரசின் துரோகம்!

ஒக்ரோபர் நடுப்பகுதியில் பாரீசில் நடைபெற்ற ஐ.நா. கல்வி, விஞ்ஞான, கலாச்சார அமைப்பின் (யுனெஸ்கோ) கூட்டத்தில் பலஸ்தீனத்தில் இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியிலுள்ள மலைக் கோவிலைச் சுற்றிவர உள்ள பகுதிகளில் இஸ்ரேலிய சியோனிச அரசு மேற்கொண்டு வரும் கலாச்சார அழிப்புகளுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் இலங்கை அரசு வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் பலஸ்தீன மக்களுக்கு துரோகம் இழைத்துள்ளது.

இலங்கை அரசின் இந்தத் துரோகம் குறித்து முஸ்லீம் மக்கள் மிகவும் கோபம் கொண்டுள்ள அதேவேளையில், தம்மை முஸ்லீம் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகச் சொல்லிக் கொண்டு பதவிக்கு வரும் எல்லா அரசுகளிலும் (இன்றைய அரசிலும்) அமைச்சுப் பதவிகளில் சுகித்திருக்கும் ரவூப் ஹக்கீம், றிசாட் பதியுதீன் போன்றவர்கள் மைத்திரி – ரணில் அரசின் இந்தத் துரோகச் செயலைக் கண்டும் காணாமல் இருக்கின்றனர். (முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் மட்டும் இந்தச் செயலை வன்மையாகக் கண்டித்துள்ளார்)

1956இல் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க பதவிக்கு வந்த காலம் முதல் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான எல்லா அரசுகளும் சர்வதேச நிறுவனங்களில் பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாகவே வாக்களித்து வந்துள்ளன. சிறீமாவோ பண்டாரநாயக்க பிரதமராக இருந்த காலத்தில் இலங்கைக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு, கொழும்பில் பலஸ்தீனத் தூதரகமும் திறக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பலஸ்தீன மக்களின் இஸ்ரேலிய சியோனிஸ்ட்டுகளுக்கு எதிரான போராட்டத்துக்கு உறுதியான ஆதரவு வழங்கி வந்ததுடன், 25 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை – பலஸ்தீன நட்புறவுச் சங்கத்தின் தலைவராகவும் இருந்துள்ளார்.

ஆனால் 1977இல் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெவர்த்தன ஆட்சிக் காலத்தில் இஸ்ரேலுடன் நெருக்கமான உறவுகள் ஏற்படுத்தப்பட்டு, கொழும்பில் இஸ்ரேலிய உளவு அமைப்பான ‘மொசாட்’டின் அலுவலகமும் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. புலிகளுக்கு எதிரான போராட்டத்துக்கு உதவுவதற்கென அதற்குக் காரணமும் சொல்லப்பட்டது.

ஆனால், மொசாட் உளவு நிறுவனம் ஒரு பக்கத்தில் இலங்கை அரச படைகளுக்கு இஸ்ரேலில் பயற்சி அளித்த அதேநேரத்தில், அதற்கு அருகே வைத்து புலிகளுக்கும் ஆயுதப் பயிற்சி அளித்தது. (ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ் போன்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு தமிழ் இயக்கங்கள் யசீர் அரபாத் தலைமையிலான பலஸ்தீன விடுதலை இயக்கத்திடம் ஆயுதப் பயிற்சி பெற்றன)

**யாசின்**

இப்படியாக பலஸ்தீன ஆதரவுப் பாரம்பரியத்தைக் கொண்ட இலங்கையின் அணிசேராக் கொள்கையை, தற்போதைய அரசாங்கம் ஏகாதிபத்திய சார்பாக, இஸ்ரேலிய சார்பாக மாற்றி அமைத்துள்ளது. அதற்காகவே அதற்குப் பொருத்தமான மங்கள சமரவீரவை வெளிநாட்டு அமைச்சராக்கி, அவர் தனது வாழ்நாளில் பெரும் பகுதியை மேற்கத்தைய தலைநகரங்களில் கழித்து வருகிறார்.

யுனெஸ்கோ வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத இன்னொரு நாடு எமது அண்டை நாடான இந்தியா. இந்தியாவில் மோடி தலைமையில் இந்துத்துவ, பாசிச, வலதுசாரி அரசு அமைந்த பின்னர், அவரது அரசு சகல விடயங்களிலும் அமெரிக்காவின் ஆசியக் கூட்டாளியாகச் செயல்பட்டு வருகிறது. அதன் காரணமாகவே மோடியின் அரசும் இஸ்ரேலுக்கு எதிரான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.




அண்மையில் பாகிஸ்தான் எல்லைக்குள் இந்தியப் படைகள் அத்துமீறிப் புகுந்து, ‘பயங்கரவாதிகளை ஒழிக்கிறோம்’ என்ற போர்வையில் கொலை செய்துவிட்டு வந்தது. அதுமட்டுமின்றி, பாகிஸ்தானுடன் ஒரு போருக்கத் தயாராகி வரும் மோடி அரசு, பாகிஸ்தானில் நடைபெற இருந்த ‘சார்க்’ மாநாட்டையும் புறக்கணித்தது. இந்தியாவின் ‘பெரியண்ணன்’ தனத்தை ஏற்று அதன் வாலில் தொங்க வேண்டும் என்பதற்காக, இலங்கையின் மைத்திரி – ரணில் அரசு எந்தவிதமான முகாந்திரமுமின்றி, தானும் சார்க் மாநாட்டைப் பகிஸ்கரித்தது.


முன்னைய மகிந்த ராஜபக்ச அரசு உலக நாடுகளைப் பகைத்துக் கொண்டது என்றும், தற்போது தமது அரசுக்கு உலகிலுள்ள அனைத்து நாடுகளுடனும் நல்லுறவு உள்ளது என்றும் பீற்றித் திரியும் மைத்திரி – ரணில் கோஸ்டி, பாரீஸ் கூட்டத்தில் இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானத்தை வழமைபோல எதிர்த்த அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு உதவும் வகையில், வாக்களிப்பில் கலந்து கொள்ளாது தனது ஏகாதிபத்திய விசுவாசத்தைப் பறைசாற்றியுள்ளது.

அதேநேரத்தில் இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானத்தை உலகின் மனச்சாட்சியுள்ள நாடுகளான சீனா,

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...

## புதிய அரசியல் அமைப்பு:

# புதிய மொந்தைக்குள் பழைய கள்!




**மை**த்திரி – ரணில் 'நல்லாட்சி' அரசால் அடுத்த ஆண்டு முற்பகுதியில் வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய அரசியல் அமைப்பு சமஸ்டித் தன்மையைக் கொண்டதாகவும், மதச்சார்பற்றதாகவும் இருக்கும் என, தமிழ் தேசியக் கூட்டமைப்பும், அரச சார்பற்ற நிறுவனங்கள் சிலவும், சில மத அமைப்புகளும் இலங்கையின் சிறுபான்மை இனங்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றன.

முக்கியமாக, இம்முறை புதிதாக வரவிருக்கும் அரசியல் அமைப்பின் பிரகாரம் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு, அந்த இணைந்த மாகாணத்துக்கு சமஸ்டி அடிப்படையிலான நிர்வாக அதிகாரம் வழங்கப்பட உள்ளது எனவும், இந்த அருமையான சூழ்நிலையை வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் பேரவை 'எழுக தமிழ்' (புலிகளின் பொங்கு தமிழ்) போன்ற அதிதீவிர தமிழ் தேசியவாத நிகழ்வுகளை நடாத்தி குழப்ப முயற்சிக்கின்றது என்றும், கூட்டமைப்பின் ஆர்.சம்பந்தன் – எம்.ஏ.சுமந்திரன் குழுவினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஆனால், விக்னேஸ்வரன் குழுவினரும் சம்பந்தன் குழுவினரின் பிரச்சாரத்துக்கு மறுத்தான் கொடுக்கத் தவறவில்லை. 'தற்போது நடைமுறையில் இருக்கின்ற மாகாணசபைகளுக்கே உரிய அதிகாரங்களைத் தராதவர்கள், இராணுவத்தின் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிக்காதவர்கள், தமிழ் பிரதேசங்களில் மிகையான இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்காதவர்கள், அரசியல் கைதிகளை விடுவிக்காதவர்கள், காணாமல் போனோரைக் கண்டறிய முயற்சிக்காதவர்கள், தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களையும் பௌத்த விகாரைகளையும் அமைப்பவர்கள், எப்படி தமிழ் மக்களுக்கு சுயாட்சித் தன்மையுள்ள சமஸ்டி அமைப்பை வழங்குவார்கள்?' என அவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

இருந்தாலும், தமிழ் மக்களுக்கு மைத்திரி – ரணில் அரசு ஏதோ பெரிய தீர்வொன்றைப் பெற்றுத் தரப்போகிறது என்ற தோரணையில், 'வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைக்கலாமா?' என சம்பந்தன் தரப்பினர் விக்னேஸ்வரன குழுவினரைப் பார்த்து உருக்கமாக வேண்டி நிற்கின்றனர்.

இதற்கிடையில், ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் புதிய அரசியல் அமைப்பில் இடம் பெறப்போகும் சில விடயங்களைக் குறிப்பிட்டு, "நாட்டைப் பிரிப்பதற்கான முயற்சி நடைபெறுகின்றது" என மக்களை எச்சரித்து வருகின்றனர். அதாவது வடக்கு கிழக்கை இணைத்து சகஸ்டி வழங்கப் போகின்றனர், பௌத்த மதத்துக்கு அரசியல் அமைப்பில் வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையை இல்லாமல் செய்யப் போகின்றனர், தேசியக் கொடியில் இருக்கும் வாளுடன் நிற்கும் சிங்கத்தின் படத்தையும், அரசமர இலையின் படத்தையும் இல்லாமல் செய்யப் போகிறார்கள் என்றும், அவர்கள் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளனர்.

## நமது அரசியல் நிருபர்

அவர்களது இந்தப் பிரச்சாரம் சிங்கள மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி, அரச தலைமையை அசைத்து விட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. அதுமட்டுமின்றி, பௌத்த மக்களின் தலைமைப்பீடமான மல்வத்தை மகாநாயக்கரையும் அந்தப் பிரச்சாரம் எட்டிப் பிடித்துள்ளது.

அண்மையில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தலைமையிலான குழுவினர் மல்வத்தை மகாநாயக்கரைச் சந்தித்த போது, புதிய அரசியல் அமைப்பு இன்னமும் வெளியிடப்படாத சூழலில் அதற்கெதிரான பிரச்சாரத்தை கொண்டு நடாத்துவது சரியல்ல எனச் சுட்டிக்காட்டிய மல்வத்தை மகாநாயக்கர், அதேநேரத்தில் பௌத்தத்துக்கு அரசியல் அமைப்பில் வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையை நீக்கக்கூடாது என்றும், தேசியக் கொடியிலிருந்து சிங்கத்தின் படத்தையும், அரசமர இலையின் படத்தையும் அகற்றக்கூடாது என்றும் அரசை வேண்டியுள்ளார்.

இந்தச் சூழ்நிலையில் புதிய அரசியல் அமைப்பை மையமாக வைத்து சிங்கள மக்கள் மத்தியிலுள்ள புத்திஜீவிகள், மத குருமார்கள், அரச உயர் அதிகாரிகள், ஆசிரியர்கள் போன்றோரிடம் அரசுக்கு எதிரான உணர்வலைகள் மேலெழத் தொடங்கியுள்ளது. இந்த எதிர்ப்புணர்வு சாதாரண சிங்களப் பொதுமக்களைப் பற்றிப் பிடிக்க அதிக நாட்கள் எடுக்காது. அரசுக்கு மக்கள் மத்தியில் எதிர்ப்பு உருவாகியுள்ளதை அரசாங்கத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் சிரேஸ்ட அமைச்சர் பதவி வகிக்கும் எஸ்.பி.திசாநாயக்க பகிரங்கமாகவே அண்மையில் சுட்டிக் காட்டியிருக்கிறார். அண்மையில் தென்னிலங்கையில் நடந்து முடிந்த சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தேர்தல் முடிவுகளும் அரசாங்கத்து எதிராக உருவாகி வரும் உணர்வலைகளை எடுத்துக் காட்டியிருக்கின்றன.

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...

# ஜே.ஆரின் பொருளாதாரக் கொள்கைகளையே அரசு பின்பற்றும்! குட்டை உடைத்தார் ரணில்!!



இலங்கையில் வாழ்கின்ற எவரிடமும் 'அரசியல் குள்ளநரி' என்ற வார்த்தையைக் கூறினால் போதும், அவருக்கு உடனடியாக இலங்கையில் எதேச்சாதிகாரம் மிக்க இன்றைய நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறையைக் கொண்டு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தான் ஞாபகத்துக்கு வருவார். அதற்குக் காரணம், ஜே.ஆர். அந்தளவு தூரம் அரசியலில் குள்ள வேலைகள் பார்த்ததுதான்.

அப்படியான குள்ள மனிதரின் 110ஆவது பிறந்த தின வைபவம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு பேசிய ஜே.ஆரின் சகோதரி வழி மருமகனும், இன்றைய பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, மிக முக்கியமான கருத்து ஒன்றை தெரிந்தோ தெரியாமலோ 'கக்கி' இருக்கிறார்.

அதாவது, தனது (தமது அல்ல) இன்றைய அரசாங்கம், ஜே.ஆரின் பொருளாதாரக் கொள்கைகளையே நடைமுறைப்படுத்தப் போவதாக வெளிப்படையாகவே அறிவித்திருக்கிறார். ஜே.ஆரின் அரசியல் கொள்கைகளையும், பொருளாதாரக் கொள்கைகளையும் அறிந்தவர்களுக்கு மருமகன் ரணிலாரின் இந்த அறிவிப்பு ஒரு வெறும் அறிவிப்பல்ல, அபாய அறிவிப்பு என்பது விளங்கும்.

ஜே.ஆர். தனது தரகு முதலாளித்துவக் கொள்கைகளுக்காகவும், தீவிரமான ஏகாதிபத்திய (அமெரிக்க) விசுவாசத்துக்காகவும், இலங்கையின் கடைகோடிப் பிற்போக்குவாதி எனப் பெயர் எடுத்தவர். அதன் காரணமாக 'அமெரிக்க யங்கி டிக்கி' என்ற செல்லப் பெயரையும் வரித்துக் கொண்டவர்.

ஜே.ஆரின் பொருளாதாரக் கொள்கைகளைத் தொடர்ந்து கடைப்பிடித்திருந்தால் இலங்கை பெரும் சுபீட்சம் பெற்றிருக்கும் என்றும் ரணில் தனது பேச்சின் போது அங்கலாய்த்திருக்கிறார். ஜே.ஆரின் பொருளாதாரக் கொள்கை என்ன என்பது மக்கள் அறியாதது அல்ல.

**சங்கரன்**

ஜே.ஆர். 1977இல் ஆட்சிக்கு வந்ததும் முதல் செய்த வேலை, நாட்டின் கதவுகளை அந்நிய ஏகபோக கொம்பனிகளுக்குத் திறந்துவிட்டதுதான். நாட்டின் நிலம், நீர் உட்பட சகல பௌதீக வளங்களையும், மக்களின் கடும் உழைப்பையும் மிக மலிவான விலைக்கு அவர் அந்நியர்களுக்குத் தாரை வார்த்தார். 'சுதந்திர வர்த்தக வலயங்கள்' என்ற பெயரில் இலங்கையின் சட்டங்கள் கூட செல்லுபடி ஆகாத, தொழிற்சங்க உரிமைகள் மறுக்கப்பட்ட, அந்நிய சுரண்டல் பொருளாதார மையங்களை உருவாக்கி, இலங்கையின் இறைமையையும், தொழிலாளர்களின் உரிமையையும் அந்நியர்களுக்குத் தரை வார்த்தார்.

மறுபக்கத்தில், விவசாயப் பொருட்கள் இறக்குமதி செய்வதில் முன்னைய சிறீமாவோ பண்டாரநாயக்க அரசு விதித்திருந்த கட்டுப்பாடுகளை முற்றுமுழுதாக நீக்கி, உள்ளூர் உற்பத்தியாளர்களின் வயிற்றில் அடித்தார். இதனால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள், உப உணவு உற்பத்தியில் அதிகமாக ஈடுபட்டு, சிறீமாவோ ஆட்சிக்காலத்தில் பெரும் பொருள் ஈட்டிய வட பகுதி விவசாயிகள்தான்.

அதே போல, துணி இறக்குமதிக்கு இருந்த கட்டுப்பாடுகளை அறவே நீக்கி, உள்ளூர் துணி உற்பத்தியாளர்களை (குறிப்பாக கிழக்கு மாகாண நெசவாளர்களை) வங்குரோத்து நிலைக்குத் தள்ளினார்.

இவ்வாறு 'திறந்த பொருளாதாரக் கொள்கை' என்ற பெயரில் ஜே.ஆர். மேற்கொண்ட நடவடிக்கைகளால், நாட்டின் தேசிய உற்பத்தி மோசமான பாதிப்புக்கு உள்ளாகி, நாட்டு மக்கள் பசியிலும் பஞ்சத்திலும் வாடும் நிலைமையை உருவாக்கினார். அதன் காரணமாக, அரசுக்கு எதிராக தொழிலாளி வர்க்கமும், அரச ஊழியர்களும் கிளர்ந்தெழுந்து வேலை நிறுத்தங்கள்,

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட பொழுது, ஆயுதப்படைகளைக் கொண்டு அவர்களை அடித்து நொருக்கினார். அதுமட்டுமின்றி, மக்களைத் திசை திருப்புவதற்காக, தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதத்தை ஒரு ஆயுதமாக்கி, அவர்கள் மீது இராணுவ ஒடுக்குமுறையை ஏவினார்.

ஜே.ஆரின் பொருளாதாரக் கொள்கை அவர் 1977இல் ஆட்சிக்கு வந்தபொழுது மட்டும் வெளிப்பட்ட ஒன்றல்ல. அதற்கு வெகு காலத்துக்கு முன்னரே வெளிப்பட்ட ஒன்றுதான். அதாவது, டட்லி சேனநாயக்க தலைமையில் 1953இல் ஆட்சியில் இருந்த ஐ.தே.க அரசில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவே நிதி அமைச்சராக இருந்தார். அந்த நேரத்தில் ஏகாதிபத்திய உலக வங்கியின் ஆலோசனையைக் கேட்டு ஜே.ஆர். கொண்டு வந்த மக்கள் விரோத வரவு செலவுத் திட்டத்தால், 1953 ஒகஸ்ட் 12ஆம் திகதி ‘ஹர்த்தால்’ என்ற பெயரில் நாடு முழுவதும் மக்கள் கிளர்ச்சியில் இறங்கியதால், பிரதமர் டட்லி பதவியைத் துறந்து நாட்டை விட்டே ஓடவேண்டி ஏற்பட்டது.

அதுமட்டுமின்றி, ஜே.ஆரின் கம்யூனிச எதிர்ப்புக் கொள்கையும் மிகவும் பிரசித்தமானது. அதற்கு ஒரு உதாரணம் கூறலாம். இலங்கை சுதந்திரம் அடைந்தது 1948இல். அதற்கு முன்னதாக 1940இல் ஐக்கிய நாடுகள் சபையை ஸ்தாபிப்பதற்கு முன்னேடியான ஆலோசனைக் கூட்டம் ஒன்று அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் இலங்கை சார்பில் கலந்து கொண்ட ஜே.ஆர்., ஆரம்பிக்கப்படவுள்ள ஐ.நா. சபையில் அப்போது ஸ்டாலின் தலைமையில் இருந்த சோவியத் யூனியனை சேர்க்கக்கூடாது என்ற கருத்தை முன்வைத்தார். அதற்குக் காரணம், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியால் தலைமை தாங்கப்படும் ஒரு சோசலிச நாடு என்பதுதான்.

அதே போல, ஜே.ஆரின் சிங்களப் பேரினவாதக் கொள்கைக்கும் பல உதாரணங்கள் உண்டு. இலங்கையில் மொழிப் பிரச்சினை ஆரம்பம் ஆனதற்கு எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க தான் முழுக்க முழுக்கக் காரணம் என்றுதான் பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதன் உண்மையான சூத்திரதாரி ஜே.ஆர்.தான். இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னரே பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இருந்த அரசாங்க சட்டசபையில் 1944இலேயே இலங்கையின் ஆட்சி மொழியாகத் தனியச் சிங்களமே இருக்க வேண்டும் என்றொரு தீர்மானத்தை ஜே.ஆர். கொண்டு வந்தார். (அது ஏற்கப்படவில்லை)

பின்னர், பண்டாரநாயக்க வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்த 1956 பொதுத் தேர்தலுக்கு முன்னர் களனியில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி மாநாட்டில் ஜே.ஆர். மீண்டும் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். அந்தத் தேர்தலில் தற்செயலாக ஐ.தே.க. வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்திருந்தால், பண்டாரநாயக்கவுக்குப் பதிலாக ஜே.ஆரே தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி இருப்பார்.

அவரது சிங்களப் பேரினவாதக் கொள்கைக்குச் சான்றாக பண்டா – செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராக அவர் மேற்கொண்ட பிரசித்தி பெற்ற ‘கண்டி யாத்திரை’ இன்றும் நினைவு கூரப்படுகிறது. அதுமட்டுமின்றி, அவர் தமிழர்களைப் பார்த்து “போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்” என்று விடுத்த சவாலும் மறந்து போகக்கூடியது அல்ல. பின்னர் அதை நடைமுறைப்படுத்துவது போல, 1977இல் அவர் ஆடசிக்கு வந்தபின்னர் அதே ஆண்டும், பின்னர் 1981, 1983 ஆண்டுகளிலும் அவரது அரசு கட்டவிழ்த்துவிட்ட தமிழ் மக்களுக்கு எதிரான இன வன்செயல்களும் என்றுமே மறக்க முடியாதவை.

இப்படியான ‘மாமா’ ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் மக்கள் விரோதக் கொள்கைகளையே தனது அரசு பின்பற்றப் போவதாக பிரதமர் ரணில் தெரிவித்திருக்கிறார். அவரது இந்த அறிவிப்புக்கு இப்போதைய அரசில் ஐ.தே.கவுடன் பங்காளிகளாகச் சேர்ந்திருக்கும் ஒருபகுதி சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரும், அவர்களை ஐ.தே.கவிடம் தமது அரசியல் இலாபத்துக்காக விலைபேசி விற்ற இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாளைய ஜனாதிபதி சந்திரிக போன்றோர் என்ன சொல்லப் போகிறார்கள்? ரணில் சொல்வதை மறுக்கப் போகிறார்களா அல்லது அவர் சொல்வதும் ‘நல்லாட்சி’யின் ஒரு அம்சம்தான் என்று சப்புக்கட்டு கட்டப் போகிறார்களா? (இந்த அரசை 5 வருடங்களுக்கு எவராலும் அசைக்க முடியாது என்று அடிக்கடி மைத்திரி சொல்வதால், ரணிலின் வழியிலேயே ஆட்சிக் குதிரை ஓடப் போகிறது என்றுதான் கொள்ளலாம்)

ரணில் தமது மாமனார் ஜே.ஆரின் நினைவு உரையின் போது, அதன் ஒரு பகுதியாக தனது வழமையான கோமாளித்தனத்தையும் வெளிப்படுத்தி இருக்கிறார். அதாவது, ஜே.ஆரின் தீர்க்கதரிசனமிக்க பொருளாதாரக் கொள்கைகளால் கவரப்பட்டே, சீனாவில் டெங்சியாவோ பிங் பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொண்டதாகவும், அதே போல இந்தியாவில் பிரதமராக இருந்த நரசிம்ம ராவும் கூட அதையே பின்பற்றியதாகவும் ‘அவிழ்த்து’ கொட்டியிருக்கிறார்.

முன்பொருமுறை இலங்கையில்

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க…

## 3ம் பக்கத்தொடர்ச்சி…

ரஸ்யா, வியட்நாம், தென் ஆபிரிக்கா, பாகிஸ்தான், ஈரான், எகிப்து, அல்ஜீரியா, பங்களாதேஸ், பிரேசில், சாட், டொமினிக்கன் குடியரசு, லெபனான், மலேசியா, மொரக்கோ, மொரிசஸ், மெக்சிக்கோ, மொசாம்பிக், நிக்கரக்குவா, நைஜீரியா, ஓமான், கட்டார், செனகல், சூடான் ஆகிய நாடுகள் ஆதரித்து வாக்களித்துள்ளன.

இந்த வாக்களிப்பைக் கவனிக்கும் போது, மைத்திரி – ரணிலின் இலங்கை அரசு எப்படி உலகின் மனச்சாட்சியுள்ள நாடுகளின் வரிசையிலிருந்து விலகி நிற்கிறது என்பது புலனாகும். இவர்கள்தான் கடந்த மகிந்த அரசு முஸ்லீம்களுக்கு எதிராகச் செயல்படுகிறது என்று சொல்லி, அவர்களின் வாக்குகளைக் கொள்ளையடித்து ஆட்சிக்கு வந்தவர்கள். இப்பொழுது அந்த மக்களின் உடன் பிறவாச் சகோதரர்களான பலஸ்தீன மக்களுக்குத் துரோகம் இழைத்து நிற்கின்றனர்.

இலங்கை முஸ்லீம் மக்கள் இதைத் தெளிவாகப் புரிந்துகொண்டால் சரி.

## 4ம் பக்கத்தொடர்ச்சி…

அதுமாத்திரமின்றி, ஜனாதிபதி மைத்திரிக்கும், பிரதமர் ரணில் தலைமையிலான அரசாங்கத்துக்கும் இடையில் உருவாகியுள்ள முரண்பாடுகளும் அண்மையில் பகிரங்கத்துக்கு வந்து, அரசின் கையாலாகாத் தன்மையை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. இதனால் குழப்பம் அடைந்துள்ள ஜனாதிபதியும், பிரதமரும் மக்களைத் திசை திருப்பி தாஜா பண்ணும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சமஸ்டிக் கோரிக்கைக்குப் பதிலளித்த பிரதமர் ரணிலும், ஐ.தே.கவின் சிரேஸ்ட தலைவர்களில் ஒருவரும், அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்லவும், புதிய அரசியல் அமைப்பின் மூலம் சமஸ்டி அமைப்பு முறை எந்தக் காரணம் கொண்டும் வழங்கப்படமாட்டாது என தெட்டத் தெளிவாகக் கூறியுள்ளனர். அத்துடன், அரசியல் அமைப்பில் பௌத்தத்துக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட எந்தவொரு அரசியல் கட்சியும் ஆட்சேபிக்கவில்லை எனவும் ரணில் கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி மைத்திரியும் தனது நிலைப்பாடு ஓற்றையாட்சியே என்பதை பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்திக் கூறியுள்ளார். அண்மையில் திரிகோணமலையில் பௌத்த மத நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி, “1972இன் பின்னர் அரசியல் அமைப்பில் பௌத்த மதத்துக்கு கொடுக்கப்பட்டு வரும் முன்னுரிமையில் எந்தவித மாற்றமும் செய்யப்பட மாட்டாது” எனத் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

அதாவது, தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும், சில என்.ஜீ.ஓக்களும் கூறித் திரிவதைப் போல, புதிய அரசியல் அமைப்பின் மூலம் தமிழ் மக்களுக்கு சமஸ்டி தீர்வு வழங்கப்படுவதோ, இலங்கையை ஒரு மதச்சார்பற்ற நாடாக மாற்றப்படுவதோ நடக்கப் போவதில்லை என்பது தெளிவாகி இருக்கின்றது. இந்த இரு விடயங்களிலும் தென்னிலங்கையிலுள்ள இரு பிரதான கட்சிகள் மட்டுமின்றி, மூன்றாவது சக்தியாகவும், சோசலிச சமத்துவம் பேசும் கட்சியாகவும் இருந்து வரும் ஜே.வி.பியின் நிலையும் ஏறக்குறைய அதுதான்.

எனவே பெரிதாகப் பேசப்படும் புதிய அரசியல் அமைப்பு, சுவாலை விட்டு எரிந்து தணலாகி, மீண்டும் எரிவதற்காக நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கும் தேசிய இனப் பிரச்சினைக்கு எந்தவித தீர்வையும் முன்வைக்கப் போவதில்லை. அந்த வகையில் பார்க்கையில், புதிய அரசியல் அமைப்பை உவமைப்படுத்துவதானால், ‘புதிய மொந்தையில் பழைய கள்’ என்றுதான் சொல்லலாம்.

தமிழ் மக்களில் பெரும்பாலானர்களுக்கு இந்த உண்மை தெரிவதில்லை. அதனால்தான் அவர்கள் திரும்பத் திரும்ப பிற்போக்கு தமிழ் தலைமைகளுக்கு வாக்களித்து ஏமாந்து வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களை ஏமாற்றும் பிற்போக்கு தலைமைகளுக்கு இது எப்பொழுதும் தெரியும். இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குத் தலைமை தாங்கும் சம்பந்தன் போன்றவர்களுக்கோ, அடுத்த தலைமையை கைப்பற்ற எண்ணியிருக்கும் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் போன்றோருக்கோ இது நன்கு விளங்கும்.

அதனால்தான், ஒற்றையாட்சி மாற்றப்படாது, சமஸ்டி முறையில் அதிகாரப் பகிர்வு வழங்கப்பட மாட்டாது என்று கண்ட சம்பந்தன், ‘ஒற்றையாட்சிக்குள் சமஸ்டி’ என்ற ஒருவருக்குமே புரியாத புதிய அரசில் கலைச் சொல்லொன்றை அவிழ்த்து விட்டிருக்கிறார். ஒற்றையாட்சி என்பதும், சமஸ்டி என்பதும் எதிரெதிரான இரண்டு துருவங்களாக இருக்கையில், சம்பந்தனின் பார்வையில் அவை இரண்டும் எப்படி ஒன்றிணையப் போகின்றனவோ தெரியாது.

இதேபோன்றுதான், முன்பு புலிகளும் தமிழீழம் காணப் புறப்பட்டு, அதை அடைய முடியாத கையறு நிலையில் புலிகளின் ‘தத்துவாசிரியர்’ அன்ரன் பாலசிங்கம் ‘உள்ளக சுயாட்சி’ என்ற புதிரான வார்த்தையை வெளிவிட்டார். அங்கும் சுயாட்சி என்ற சொல்லின் நேர் எதிராகவே அந்தல் சொல் வந்து விழுந்தது.

இப்பொழுதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கையறு நிலையை ‘ஒற்றையாட்சிக்குள் சமஸ்டி’ என்ற சொல் பகிரங்கப்படுத்தி நிற்கிறது.

## 6ம் பக்கத்தொடர்ச்சி…

*வெற்றிலைக்குத் தட்டுப்பாடு வந்தபொழுது, வெற்றிலைக்குப் பதிலாக சுவிங்கத்தைச் சாப்பிடும்படி அறிவுரை கூறியவர் அல்லவா நமது பிரதமர் ரணில்! அதே போல, அரிசிக்குத் தட்டுப்பாடு வந்தபொழுது, (பிரான்சில் பதின்நான்காம் லூயி மன்னன் சொன்னது போல) சோற்றுக்குப் பதிலாக பாணையும், கேக்கையும் சாப்பிடும்படி மக்களை ‘விநயமாக’ வேண்டிக் கொண்டவர் அல்லவா நமது* பிரதமர்! அப்படி ஒரு விகடமான ஒரு பேச்சாக ரணில் சீனாவையும் இந்தியாவையும் பற்றிக் கூறிய ‘கதை’களை எடுத்துக் கொள்வதே மக்கள் குழம்மாமல் இருப்பதற்கு வழி.

இருந்தாலும், கூத்தில் ஒரு கோமாளிப் பாத்திரம் அவசியம்தான். ஆனால் கோமாளியே கதாநாயகனான இருப்பதைத்தான் சீரணிக்க முடியாமல் இருக்கிறது.

மக்களைத் தன்பால் ஈர்த்துக்கொண்டவுடன் தத்துவம் எனப்பட்டது ஒரு பௌதீக சக்தியாக ஆகிவிடுகிறது.

**– மார்க்ஸ்**

## கொடுங்கோலர் விரட்டியதால் கடல் தாய்க்கு இரையானோர்!

ஐரோப்பாவை நோக்கிச் செல்லும்போது மத்தியதரைக் கடலைக் கடக்கையில் கடலில் மூழ்கி இறந்த அகதிகளின் தொகை இவ்வருடம் (2016) யூலை 24ந் தேதி வரை 3,000 என அறிவிக்கப்பட்டுள்ளது. இது கடந்த வருடம் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 50 சத விகிதம் அதிகமானதாகும்.

இறந்தவர்களில் அதிகமானோர் லிபியாவுக்கும் இத்தாலிக்கும் இடைப்பட்ட கடல் பகுதியிலேயே மூழ்கி இறந்துள்ளதாக அகதிகளுக்கான சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

## றேகனின் உயிருக்கு உலை வைக்க முயன்றவர் விடுதலை!

1981ஆம் ஆண்டு அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த றொனால்ட் றேகனை கொலை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் கைதாகி கடந்த 30 வருடங்களாக அரசாங்க மனநோய் சிகிச்சை நிலையம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த John Hinckley JR என்ற நபர் தனது 61ஆவது வயதில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். யூலை 27இல் அவரை விடுதலை செய்து தீர்ப்பளித்த சமஸ்டி நீதிபதி ஒருவர், "அவரால் அவருக்கோ அல்லது ஏனையவர்களுக்கோ ஆபத்து எதுவுமில்லை" எனத் தெரிவித்துள்ளார். அவர் தனது எஞ்சிய காலத்தைத் தனது தாயாருடன் சேர்ந்து கழிக்கத் தீர்மானித்துள்ளார்.

## இல்லை... இல்லவே இல்லை..!

ஆப்கானிஸ்தானில் ரயில்கள் இல்லை..!
ஆப்பிரிக்காவில் புலிகள் இல்லை..!
ஈக்களுக்கு பற்கள் இல்லை..!
ஈசலுக்கு வயிறு இல்லை..!
சவுதியில் நதிகள் இல்லை..!




சந்திரனில் வாயுமண்டலம் இல்லை..!
சுண்டெலிக்கு வியர்ப்பது இல்லை..!
மண்ணுளி பாம்பிற்கு கண்கள் இல்லை..!
யானையின் துதிக்கையில் எலும்புகள் இல்லை..!
மலைப்பாம்பிற்கு விஷமில்லை..!
பாம்பு, மீன் போன்றவற்றிற்கு கண்ணிமைகள் இல்லை..!
யமுனை நதி கடலில் கலப்பது இல்லை..!
வடதுருவத்தில் நிலப்பரப்புகள் இல்லை..!
வண்ணத்துப்பூச்சிக்கு வாயில்லை..!
முதலைக்கு நாக்கில்லை..!
பாம்பிற்கு காதில்லை..!
வௌவாலிற்கு பார்வை இல்லை..!
தவளைக்கு கழுத்து இல்லை..!
நண்டிற்கு தலை இல்லை..!
காண்டாமிருகம் தன் கொம்பினால் யாரையும் தாக்குவது இல்லை..!

## பணம்

சீனர்கள்தான் பணம் என்ற விஷயத்தை முதலில் கொண்டு வந்தார்கள். கிறிஸ்து பிறப்பதற்கு 2,000 ஆண்டுகளுக்கு முன் இவர்கள் உலோக பொறிகளை வியாபார மாற்றாக உபயோகித்துள்ளார்கள். பிறகு கிரேக்கர்கள் உலோகக் காசுகளை கண்டுபிடித்தார்கள். சீனர்கள் 13 ஆம் நூற்றாண்டில் முதலில் காகிதப் பணத்தை உருவாக்கினார்கள். பதினேழாம் நூற்றாண்டில் பிரிட்டிஷ்காரர்கள் நவீன காகிதப் பணத்தை உருவாக்கினார்கள். இது, சுருக்கமாக பணத்தின் வரலாறு.

அமெரிக்காவில்தான் 1920 வாக்கில் கிரெடிட் கார்ட் (Credit Card) முதல் முதலாக உபயோகப்படுத்தப்பட்டது. முதலில் இவற்றை பெட்ரோல் நிரப்ப மட்டுமே உபயோகப்படுத்த முடியும். 1950 களில் டைனர்ஸ் (Diners), அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் (American Express) என்று கார்டுகள் பல இடங்களிலும் உபயோகப்படுத்தக் கூடிய வசதி வரத் தொடங்கியது.

1960 களில், விசா கார்ட் (Visa card) மற்றும் மாஸ்டர் கார்ட் (Mastercard) அறிமுகப்படுத்தப்பட்டது. அடுத்தபடியாக டெபிட் கார்ட் (Debit Card) என்ற நிதி கருவி அறிமுகப்படுத்தப்பட்டது. டெபிட் கார்டில் கடன் கிடையாது. இதன் மூலம் உங்கள் கணக்கிலிருந்து எவருக்கும் பணத்தைச் செலுத்தலாம்.

## வெள்ளை மாளிகையில் கறுப்பு இரத்தம்?

"ஒவ்வொரு நாள் காலையிலும் நான் விழித்தெழுகின்ற வீடு அடிமைகளால் கட்டப்பட்டதாகும்" என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் மனைவி கூறியிருக்கிறார். அமெரிக்க ஜனாதிபதிகள் வசிக்கின்ற உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளை மாளிகையையே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் எனக் கருதப்படுகிறது. அமெரிக்காவில் மிக நீண்டகாலமாக ஆபிரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்ட கறுப்பின மக்கள் அடிமைகளாக வைத்திருக்கப்பட்டதுடன், அவர்களே நவீன அமெரிக்காவின் சிற்பிகள் என்பதும் நிதர்சனமான உண்மையாகும்.

## சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு...

சர்க்கரை நோயாளிகளுக்கு என்று பிரத்தியேக டயட் இல்லை. உணவின் கலோரி, கிளைசெமிக் இண்டெக்ஸ் தெரிந்து, அளவோடு எடுத்துக் கொண்டாலே போதும். நார்ச்சத்து நிறைந்த உணவுகளைக் கட்டாயம் எடுத்துக் கொள்ள வேண்டும். தினமும் ஒரு கீரை சூப், சௌசௌ, முட்டைக்கோஸ், முள்ளங்கி, முருங்கைக்காய், கத்திரி, காலிஃபிளவர், பாகற்காய், வாழைத்தண்டு, வாழைப்பூ, நூல்கோல், கொத்தவரங்காய், வெங்காயம், பீர்க்கங்காய், வெள்ளரிக்காய், கொத்தமல்லி, கறிவேப்பிலை, புதினா, இஞ்சி, சின்ன வெங்காயம் சாப்பிடலாம். பழங்களில், சாத்துக்குடி, அன்னாசி, கொய்யா, ஆப்பிள், பேரிக்காய், தர்ப்பூசணி சாப்பிடலாம்.

நன்றி: டாக்டர் விகடன்

# படித்ததில் ரசித்தது!

“நீங்க ஏன் மலையாளத் தமிழ்னு பிரிச்சுப்பேசணும்? செந்தமிழே கொடு மலையாளம்னு சொல்லே இருக்குது. சிலோன்காரங்களும், இங்கே நீங்க நாஞ்சில்காரங்களோடு சேர்ந்து பேசற தமிழும் எழுத்தும் பார்க்கப் பார்க்க பிரமானந்தமா இருக்கு. தமிழின் இனிமைகூட தமிழகத்திலே மதுரைக்குத் தெற்கேதான். எங்க மெட்ராஸ் தமிழ் மாதிரி பேஜாரான காரியம் ஏதுவுமே இல்லை.”

**- ஆ.மாதவன் எழுதிய ‘பெயரில்லாத கதை’ சிறுகதைத் தொகுதியிலிருந்து**

“எனக்குத் தெரிந்து திருநெல்வேலியிலும், இலங்கையிலும் மட்டுமே ‘சொதி’ என்னும் குழம்பு உள்ளது. முழுக்க முழுக்க தேங்காய்ப்பாலில் தயாராகும் சொதி, திருநெல்வேலி சைவ சேளாளர் வீட்டுத் திருமணங்களில் தவறாமல் இடம் பெறும். திருமணத்துக்கு மறுநாள் மறுவீட்டுப் பந்தியில் சொதி பரிமாறப்படுவது தவிர்க்க முடியாத ஒன்று. ‘அதென்ன கலியாணத்துக்கு வந்துட்டு சொதி சாப்பாடு சாப்பிடாம போறியா?’ என்று திருமண வீட்டார் உறவினர்களிடம் சொல்லாமல் இருப்பதில்லை.”

**- திரைப்பட நெறியாளர் சுகா எழுதிய ‘தாயார் சன்னதி’ அனுபவக் கட்டுரைத் தொகுப்பிலிருந்து**

“தொலைக்காட்சி வசதிகள் வராத காலத்தில் திருநெல்வேலிப் பகுதியில் பெரிய பொழுதுபோக்குகளில் ஒன்று இலங்கை வானொலி கேட்பது. மயில்வாகனன் சர்வானந்தா, கே.எஸ்.ராஜா, ராஜேஸ்வரி சண்முகம், அப்துல் ஹமீது போன்ற பெயர்களைக் கேட்டபடியேதான் நெல்லைவாசிகளின் பொழுது விடியும். படத்தின் பெயரையும், பாடியவர்களின் பெயரையும் அறிவிப்பதோடு விட்டுவிடுவதில்லை இந்த அறிவிப்பாளர்கள். சுத்தமான தமிழில் சொக்க வைக்கும் குரலில் பாடலைப் பற்றிய சிறு குறிப்பு ஒன்று கொடுத்து அதன் பிறகே பாடலை ஒலிபரப்புவார்கள். சில சமயங்களில் ஒலிபரப்பப்படும் பாடலை விடவும் இவர்களின் குறிப்பு சுவையாக இருக்கும். இப்போதெல்லாம் எல்லா தொலைக்காட்சிகளிலும் இருபத்தி நான்கு மணி நேரமும் பாடல்களை ஒலிபரப்புகிறார்கள். அவர்கள் போடும் பாடலைக்கூட பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் இந்த தொகுப்பாளர்களின் தமிழும், நேயர்களுடன் அவர்களின் உரையாடலும் நம்மை கொலை வெறி கொள்ள வைக்கின்றது.”

**- சுகா எழுதிய அதே நூலிலிருந்து**

**குறிப்பு:** சுகா போன்றவர்கள் இப்படிச் சொல்கிறார்கள். ஆனால் எமது ஈழத்துச் சகாக்களோ, தென்னிந்திய குப்பைச் சினிமாவையும், கொச்சைத் தமிழையுமே சொர்க்கம் எனத் தவம் கிடக்கிறார்கள்.

# ஒருபால் வேகம்!

அமெரிக்காவில் 2015யூன் 26இல் ஒருபால் திருமணம் (Same – Sex) சட்டபூர்வமாக்கப்பட்ட பின்னர் 2016 யூலை வரை 123,000 ஒருபால் திருமணங்கள் நடைபெற்றுள்ளன.

# ஆசைக்கு அளவே இல்லை!

நமது பூமிப்பந்தின் தென்கோடியில் இருக்கும் அன்ராறிக்கா (Antarctica) பிரதேசம் ஏறத்தாழ அவுஸ்திரேலியாவின் இருமடங்கு பரப்பளவைக் கொண்டதாகும். வட துருவத்தைப் (Arctic) போலவே இங்கும் வருடம் முழுவதும் பல நூறு அடி உயரத்துக்கு பனி மூடியிருக்கும்.

அன்ராறிக்காவில் நிரந்தரக் குடிமக்கள் எவரும் இல்லை. ஆனால் அங்கு பல நாடுகள் அமைத்துள்ள ஆய்வு நிலையங்களில் பணி புரிவதற்காக ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகளும், தொழிலாளர்களும் வருடம் முழுவதும் சென்று வருவர். இவர்களில் சிலர் பல மாதங்கள் அங்கு தொடர்ச்சியாகத் தங்குவதும் உண்டு.

இது யாரும் வசிக்காத பிரதேசமாக இருந்தாலும் அங்கு ஏராளமான கனிம வளங்கள் இருப்பதாக கருதப்படுவதால், இந்தப் பிரதேசத்தின் பகுதிகளுக்கு ஆர்ஜன்ரீனா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா, சிலி, பிரான்ஸ், நியுசிலாந்து, நோர்வே ஆகிய நாடுகள் உரிமை கோரி வருகின்றன.

# பூமாதேவியை முடித்து இப்பொழுது வான தேவதை!

விண்வெளியில் அமெரிக்காவும், சோவியத் யூனியனும் (இன்றைய ரஸ்யா) ஆதிக்கம் செலுத்திய காலம் போய், இப்பொழுது பல நாடுகள் பல்வேறு தேவைகளுக்காக தமது சொந்த விண்கலங்களை வான் வெளிக்கு அனுப்பி வருகின்றன. அவற்றில் சில காலாவதியாகி அல்லது பழுதடைந்து அல்லது வெடித்துச் சிதறி வானவெளியில் சம்மா சுற்றித் திரிகின்றன.

அவ்வாறு சுற்றித் திரியும் 10 சென்ரிமீட்டரை விடப் பெரிதான விண்கல சிதிலங்களின் தொகை 2014 வரை 16,000 என விண்வெளிப் பாதுகாப்பு சுட்டெண் தெரிவிக்கிறது. அதேநேரத்தில் அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா தெரிவிக்கையில், 1 முதல் 10 சென்ரிமீட்டர் வரையிலான விண்கல சிதிலங்களின் எண்ணிக்கை 500,000 ஆக இருக்கும் என்றும், 1 சென்ரிமீட்டர் அளவுக்குக் குறைவானவற்றின் தொகை 100 மில்லியன் இருக்கும் என்றும் கூறியுள்ளது.

மேலும் நாசா இதுபற்றித் தெரிவிக்கையில், அதிக உயரத்தில் மிதக்கும் விண்கல சிதிலங்கள் பல நூற்றாண்டுகளுக்கு வானவெளியிலேயே சஞ்சரிக்கும் என்றும், 600 கிலோமீட்டர் தூரத்துக்கு கீழ் உள்ள சிதிலங்கள் படிப்படியாக பூமிக்கு வந்துவிடும் என்றும், 800 கிலோமீட்டர் உயரத்துக்கு மேல் உள்ள சிதிலங்கள் பூமிக்கு வர சில தசாப்தங்கள் எடுக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

தனது பேராசை காரணமாக பூமியை அழிவை நோக்கித் தள்ளியிருக்கும் மனிதன், இப்பொழுது எமது பூமியைத் தாங்கி சம நிலையாக வைத்திருக்கும் வான் வெளியையும் அழிக்கும் கைங்கரியத்தில் இறங்கியுள்ளதையே இது படம் பிடித்துக் காட்டுகிறது.

# சுதந்திரக் கட்சியை அழிக்கும் முயற்சியில் மைத்திரியும், சந்திரிகவும் தீவிரம்!




சிறீலங்கா சுதந்திரக் கட்சியையும், இடதுசாரிக் கட்சிகளையும் அழித்தொழித்து, நாட்டை முற்றுமுழுதாக வலதுசாரி மயமாக்கும் நடவடிக்கைகளில் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், அவரது போசகரான முன்னாள் ஜனாதிபதி சந்திரிக குமாரதுங்கவும் தீவிரமாக ஈடுபட்டு வருவதை அவர்களது ஒன்றன் பின் ஒன்றான நடவடிக்கைகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

2015 ஜனவரி 08இல் சந்திரிகவின் உதவியுடன் மைத்திரி சுதந்திரக் கட்சியை உடைத்து, ஐக்கிய தேசியக் கட்சியினதும், ஏனைய வலதுசாரிக் கட்சிகளினதும் ஆதரவுடன் நாட்டின் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியைக் கைப்பற்றியதின் மூலம் அவர்கள் இதற்குக் கால்கோள் இட்டனர்.

அதைத் தொடர்ந்து, அதே ஆண்டு ஒகஸ்ட்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது, சந்திரிக வெளிப்படையாகவே ஐ.தே.க. தலைமையிலான அணியை ஆதரித்ததின் மூலமும், மைத்திரி தேர்தலில் நடுநிலைமை வகிப்பதாக பாசாங்கு செய்து மறைமுகமாக ஐ.தே.க. அணிக்கு உதவியதின் மூலமும், சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தி, ஐ.தே.க. தலைமையிலான அரசு அமைவதற்கு வழிவகுத்தனர். அப்போதும் கூட சுதந்திரக் கட்சியிலுள்ள பதவி ஆசை கொண்ட ஒரு பகுதியினருக்கு ஆசை காட்டி, அவர்களை ஐ.தே.க. அரசின் பங்காளிகள் ஆக்கியதின் மூலம் கட்சியை மேலும் பலவீனப்படுத்தினர்.

அதுமட்டுமல்லாமல், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அதிகாரத்தின் கீழ் இருந்த அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் கலைத்த மைத்திரி – ரணில் அரசு, அவற்றுக்கான தேர்தலை உரிய காலத்தில் நடத்தாது இழுத்தடித்து வருகின்றது. அதிகாரத்துக்கு வந்து ஒன்றரை வருடங்களாகியும், சுதந்திரக் கட்சியிலோ, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலோ தனது அதிகாரத்தை மைத்திரியால் நிறுவ முடியாமல் போனது, தேர்தலை இழுத்தடிப்பதற்கான ஒரு காரணம். இன்னொரு காரணம், இன்றைய மக்கள் விரோத, தேசத்துரோக அரசாங்கம் வேகமாக மக்கள் ஆதரவை இழந்து வருவதால் தேர்தலில் தோற்றுப்போய் விடுவோம் என்ற அச்சம்.

**குகன்**

நாட்டுக்கும் கட்சிக்கும் துரோகமிழைத்த இவர்கள், எவ்வளவுதான் முயன்றபோதிலும் கூட்டு எதிரணியிலுள்ள 54 நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரையோ அல்லது கட்சி ஆதரவாளர்களில் பெரும்பான்மையினரையோ தமது பக்கம் திருப்ப முடியவில்லை. அதனால் தமது கட்டுப்பாட்டுக்குள் சுதந்திரக் கட்சியைக் கொண்டுவர முடியாமல் போன இவர்கள், சுதந்திரக் கட்சியை மேலும் பலவீனப்படுத்தி இல்லாதொழிக்கும் நடவடிக்கையில் மேலும் மேலும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

இதற்கு மேலுமோர் உதாரணமாக, செப்ரெம்பர் 04ஆம் திகதி குருணாகலில் நடைபெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் 65ஆவது ஆண்டு விழாவில் ஜனாதிபதி மைத்திரி ஆற்றிய உரை அமைந்திருக்கிறது.

அவர் தனது உரையின்போது, அடுத்த வருடம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளின் தேர்தலின் போது சுதந்திரக் கட்சி தனித்து தனது கை சின்னத்தில் போட்டியிடும் என அறிவித்திருக்கிறார். அவரது இந்த அறிவிப்பு சந்தேகத்துக்கு இடமின்றி சுதந்திரக் கட்சியையும், அதனுடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஏகாதிபத்திய

எதிர்ப்பு, முற்போக்கு, ஜனநாயக சக்திகளையும் மேலும் பலவீனப்படுத்தும் செயலில் இன்னொரு படியாகும்.

ஏனெனில், சுதந்திரக் கட்சி பலமான பொருளாதார மற்றும் அரசியல் அடிப்படையைக் கொண்ட ஒரு கட்சியல்ல. இலங்கைத் தேசிய முதலாளித்துவத்தின் பிரதிநிதியாக உருவெடுத்த அக்கட்சி, உள்நாட்டு — வெளிநாட்டு முதலாளித்துவ சக்திகளினதும், ஏகாதிபத்திய சக்திகளினதும் பலமான ஆதரவைப் பெற்றுள்ள ஐ.தே.கவை எதிர்த்து நிற்கும் ஆற்றலுள்ள கட்சி அல்ல.

அதனால்தான், சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரான எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க, புத்திசாதுரியத்துடன் ஏனைய சில அரசியல் சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்தே 1956இல் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினார். அவரது வழிமுறையையே, அவரது மனைவியான திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கவும், பின்னர் அவர்களது மகளான சந்திரிக குமாரதுங்கவும், மகிந்த ராஜபக்சவும் பின்பற்றி தேர்தல்களில் ஐ.தே.கவைத் தோற்கடித்து வெற்றியீட்டினர்.

அப்படி அவர்கள் செயற்பட்டிருந்திருக்காவிட்டால், சுதந்திரக் கட்சியால் தனித்து நின்று தேர்த்களில் வெற்றி பெற்றிருக்க முடியாது. அதற்கு ஒரு உதாரணம் 1977 பொதுத் தேர்தலாகும். அத்தேர்தலில் ஐ.தே.கவை எதிர்த்து சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிட்டது. வழமையாக சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிடும் கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி போன்ற இடதுசாரிக் கட்சிகள் சுதந்திரக் கட்சியுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக இன்னொரு அணியாகப் போட்டியிட்டன. அதன் காரணமாக ஐ.தே.கவுக்கு எதிரான வாக்குகள் பிளவுண்டு, 31 இலட்சம் வாக்குகள் பெற்ற ஐ.தே.க. ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் அமோக வெற்றி பெற்றது. 24 இலட்சம் வாக்குகள் பெற்ற சுதந்திரக் கட்சிக்கு வெறுமனே 8 ஆசனங்களே கிடைத்தன. 5 இலட்சம் வாக்குகள் பெற்ற இடதுசாரிக் கட்சிகளுக்கு இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக நாடாளுமன்றத்தில் ஒரு ஆசனமும் கிடைக்கவில்லை. அதேநேரத்தில் வடக்கு கிழக்கில் போட்டியிட்டு 3.5 இலட்சம் வாக்குகள் மட்டும் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி 18 ஆசனங்கள் பெற்று பிரதான எதிர்க்கட்சி ஆகியது.

இந்த வரலாற்றுப் படிப்பினையிலிருந்து ஒரு விடயம் தெளிவாகின்றது. அதாவது, சுதந்திரக் கட்சி ஏனைய முற்போக்கு, ஜனநாயகக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தால் மட்டுமே தேர்தல்களில் வெற்றிபெற முடியும் என்பதே இது. இந்த விடயம் 25 வருடங்களாக சுதந்திரக் கட்சியில் இருந்தவரும், அதன் பொதுச் செயலாளர் பதவி வகித்தவருமான மைத்திரிக்கு நன்கு தெரியும். தெரிந்தும் உள்ளூராட்சித் தேர்தலில் சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடும் என்று அறிவித்திருப்பது, ஐ.தே.கவை வெற்றிபெற வைப்பதற்கான மூலோபாயமே.

அதுவும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளராக தனது விசுவாசி ஒருவரை மைத்திரி நியமித்த பின்னரும் கூட, தனித்துப் போட்டியிடும் முடிவை மைத்திரி அறிவித்திருப்பது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. அதுமட்டுமல்லாமல், கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகளோ அல்லது ஏனைய கட்சிகளோ சுதந்திரக் கட்சியின் தலைமையை ஏற்க மறுப்பதாக இதுவரை எந்தச் சந்தர்ப்பத்திலும் கூறவுமில்லை.

இதற்குள் இன்னொரு விடயமாக, சுதந்திரக் கட்சியின் 65 ஆண்டு விழாவில் பேசிய மைத்திரி, தான் நாட்டின் பாரம்பரியமான ஆளும் வர்க்கக் குடும்பம் ஒன்றில் பிறக்காமையும், ஏழை விவசாயி ஒருவரின் ஓலைக் குடிசைவீட்டில் பிறந்ததுமே, தன்னை சுதந்திரக் கட்சியிலுள்ள ஒரு பிரிவினர் எதிர்க்கக் காரணம் என்று அழுது வடிந்திருக்கிறார். இதற்குச் சொல்லக்கூடிய பதில் இதுதான்.

திரு மைத்திரி அவர்களே! சுதந்திரக் கட்சியிலுள்ள பெரும்பான்மையினரும், நாட்டின் பெரும்பான்மை மக்களும் உங்களை எதிர்ப்பதற்குக் காரணம் உங்களின் குடும்பப் பின்னணி அல்ல. அப்படி அவர்கள் கருதியிருந்தால், உங்களுக்கு கடந்த 25 வருடங்களாக சுதந்திரக் கட்சியில் கௌரவம் கொடுத்து வைத்திருக்கமாட்டார்கள்.

உண்மை என்னவெனில், நீங்கள் சுதந்திரக் கட்சிக்கு துரோகம் இழைத்து, அதன் அடிப்படைக் கொள்கைகளுக்கு மாறாக ஐ.தே.கவுடன் கூட்டுச் சேர்ந்ததாலும்,

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க…

## நூல் வெளியீடு:

# 1952 - 1986
# தோழர் விசுவானந்ததேவன்

***கரவெட்டி – கல்லுவம் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இலங்கை மார்க்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்பாட்டாளரும், தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (NLFT) மற்றும் தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி (PLFT) என்பனவற்றின் ஸ்தாபக முன்னோடியுமான தோழர் விசுவலிங்கம் விசுவானந்ததேவன் அவர்கள் காணாமற்போய் 30 ஆண்டுகள் நிறைவையொட்டி அவருடன் நெருங்கிப் பழகிய 25 தோழர்கள், நண்பர்கள் எழுதிய கட்டுரைகளைத் தாங்கிய நூலின் வெளியீட்டு வைபவம்.***

***இடம்:* Mid Scarborough Community Centre *(கெனடி ரயில் நிலையத்துக்கு அருகாமையில்)* 2467, Eglinton Avenue East, Scarborough, ON, M1K 2R1**

***காலம்:* நொவம்பர் 19, 2016 சனிக்கிழமை மாலை 6.30 முதல் 10.00 மணி வரை**

**தொடர்புகளுக்கு:**

விசுவா நூல் வெளியீட்டுக் குழு
E-Mail: visvabook@gmail.com

# சுகாதார அமைச்சரின் ‘நல்லாட்சி’!

**‘கோப்’** என்றழைக்கப்படும் பொதுத்துறை நிறுவனங்களின் நடவடிக்கைகள் சம்பந்தமாக விசாரணை செய்யும் குழுவின் முன்னால் சாட்சியமளித்த இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆகியோர், சுகாதார அமைச்சர் டொக்டர் ராஜித சேனரத்னவின் உதவியாளர்களாக நியமிக்கப்பட்ட 12 பேரும் அமைச்சரின் மனைவியின் சிபாரிசின் பேரிலேயே நியமிக்கப்பட்டதாக ஒத்துக் கொண்டிருக்கின்றனர்.

மேலும், கூட்டுத்தாபனத்தின் இரண்டு உயர் அதிகாரிகள் கூறுகையில், தாம் பதவியேற்ற பின்னர் நியமிக்கப்பட்ட 61 தொழிலாளர்களில் 43 பேர் வழமையான நெறிமுறைகளின் பிரகாரம் நியமிக்கப்படவில்லை எனத் தெரிவித்திருக்கின்றனர்.

அதுதவிர, கோப் முன்னிலையில் சாட்சியமளித்த இரண்டு பெண் உத்தியோகத்தர்கள், உயர் அதிகாரிகள் பெண்களைத் தூசண வார்த்தைகளால் துவேசிப்பதாக் குற்றம் சாட்டியிருக்கின்றனர். கீழ்மட்ட உத்தியோகத்தர்கள் எல்லோருமே ஏகோபித்த குரலில் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய நிர்வாகத்தின் கீழ் தாம் பல்வேறு துன்பங்களை அனுபவிப்பதாக முறையிட்டிருக்கின்றனர்.

சுகாதார அமைச்சர் ராஜிதவின் மனைவியின் சிபாரிசின் பேரில் நியமிக்கப்பட்ட 12 பேருக்கும் கூட்டத்தாபனத்தால் மாதாந்தம் தலா 20,000 ரூபா சம்பளமாக வழங்கப்படுகின்றபோதும், அவர்களில் எவரும் கூட்டத்தாபனத்தில் பணி புரிவதில்லை என்றும், அமைச்சரின் உதவியாளர்களாகச் செயற்படுவதாகவும், கூட்டுத்தாபனத்தின் தலைவர் கோப் முன்னிலையில் தெரிவித்திருக்கிறார்.

2015 டிசம்பரில் ஏழு புதிய ஆயுர்வேத மருந்துகளை அறிமுகம் செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சிக்கு ஏழு மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டதாகவும், ஆனால் அவற்றில் இரண்டு மருந்துகளே புதியவை என்றும், மற்றையவை பழைய மருந்துகளுக்கு புதிய பெயர் சூட்டப்பட்டவை என்றும், அதிகாரிகள் கோப் முன்னிலையில் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் நோயாளிகளின் பாவனைக்கென 7.9 மில்லியன் செலவில் வாகனம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டதாகவும், ஆனால் அதன் இருக்கைகள் கழற்றப்பட்டு அது பொருட்கள் ஏற்றி இறக்கப் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய தலைவர், சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்னவின் நெருங்கிய சகா என்றும், அவரை நியமினம் செய்வதில் அமைச்சர், உயர் பதவிகளுக்கு ஆட்களை நியமிக்கும் பொழுது அனுமதி பெற வேண்டிய குழுவின் அனுமதி பெறாமலேயே அவருக்கு நியமனம் வழங்கியதாகவும் தெரிய வந்திருக்கிறது.

கடந்த அரசாங்கத்திலிருந்து வெளியேறி தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியின் உதவியுடன் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்குத் தீர்மானித்தபோது, அவருடன் கூட வெளியேறியவர் தற்போதைய சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்ன. இருவரும் அப்பொழுது மகிந்த ராஜபக்சவின் ‘காட்டாட்சி’யை வீழ்த்தி ‘நல்லாட்சி’ அமைக்கப் போவதாகக் கூறியே டமாரம் அடித்தனர். இப்பொழுது அந்த நல்லாட்சியின் சிருஸ்டிகர்த்தாக்களில் ஒருவரான ராஜிதவின் அமைச்சில் எடுக்கும் முடை நாற்றத்தைப் பார்த்தால், நல்லாட்சியின் ஏனைய அமைச்சுகளின் சித்திரம் எப்படி இருக்கும் என்பதை மனக்கண்ணால் பார்க்க முடிகிறது.

“ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம்’ என்று சும்மாவா சொன்னார்கள்?

**-பிரணவன்**

# புதிதாக 150 பொலிஸ் நிலையங்கள் எதற்காக?

**அ**ண்மையில் வைபவம் ஒன்றில் பேசிய பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர, நாட்டில் புதிதாக 150 பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படவுள்ளதாக ஒரு அறிவிப்பை விடுத்திருக்கிறார். பெரும்பாலானவர்கள் இந்தச் செய்தியை பத்திலே பதினொன்றாக வாசித்துவிட்டுப் போயிருப்பார்கள்.

ஆனால், இந்தச் செய்தி ஆழ்ந்த கவனத்திற்கு உரியது. ஏனெனில் நாட்டில் 30 வருட உள்நாட்டுப் போர் முடிந்து ஏழு வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், ‘நல்லாட்சி’ ஏற்பட்டு, ஜனநாயகம் மீள நிலைநாட்டப்பட்டு, தேசிய நல்லிணக்க முயற்சிகள் முழுவீச்சில் நடைபெறுவதாக அரசாங்கம் பெரிதாகப் பீற்றிக்கொள்ளும் இவ்வேளையில், புதிதாக ஐந்தல்ல, பத்தல்ல, 150 பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படுவது என்பது, இலங்கைச் சமூகத்தில் அடிப்படைக் கோளாறு எங்கோ இருப்பதன் அறிகுறியே தவிர வேறல்ல.

அண்மைக்காலமாக, யாழ்ப்பாணத்தில் குற்றச்செயல்கள் அதிகரித்திருப்பதாகவும், இதற்கு அங்கு நிலை கொண்டுள்ள படையினர்தான் காரணம் என்றும், சாதாரண மூன்றாந்தர தமிழ் தேசிய அரசியல்வாதிகள் முதல் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன வரை பகிரங்கமாகக் குற்றச்சாட்டுகளை வைத்து வருகின்றனர்.

குற்றச்செயல்கள் அதிகரித்திருக்கின்றன என்பது உண்மைதான் எனினும், இதற்கு இராணுவம் மட்டும்தான் காரணம் என்பதற்கு போதிய காரணங்கள் இருக்கின்றனவா? தமிழ் சமூகத்தில் ஆயுதப் போராட்டம் ஏற்பட்ட காலத்திலிருந்து இயக்கங்களால் ஏற்படுத்தப்பட்டு வந்த கடுமையான அடக்குமுறையும், பின்னர் யுத்தம் முடிவடைந்த பின்னர் ஏற்பட்ட கட்டற்ற சுதந்திரமும், பெருகி வரும் நுகர்வுக் கலாச்சாரமும் இந்தக் குற்றச் செயல் அதிகரிப்புக்கு பங்கு வகிக்கவில்லையா? குற்றச்செயல் அதிகரிப்புக்கு தமிழ் சமூகத்தில் உள்ளார்ந்த காரணிகள் எதுவும் இல்லையா?

அதுவுமல்லாமல், இராணுவம்தான் திட்டமிட்டு வடக்கில் குற்றச் செயல்களை அதிகரிக்க வைக்கிறதென்றால், தமிழர்கள் அதிகமாக வாழும் ஏனைய பகுதிகளான வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திரிகோணமலை போன்ற பகுதிகளிலிருந்து ஏன் இவ்வாறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படவில்லை? இவைகள் ஆராய்வுக்குரிய கேள்விகள்.

உண்மை என்னவெனில், யுத்த காலத்திலும் சரி, அதன் பின்னரும் சரி, வடக்கில் மட்டுமின்றி, தெற்கிலும் குற்றச் செயல்கள் அதிகரித்தே வந்திருக்கின்றன. இதற்குக் காரணம், வெறுமனே ஒருவரது குற்ற மனப்பான்மை மட்டுமன்று. அந்தக் குற்ற மனப்பான்மைக்குத் தூண்டுகின்ற புறக் காரணிகளான சமூகத்தில் நிலவுகின்ற வறுமை, பொருளாதாரப் போட்டி, சமூக சமத்துவமின்மை, இன முரண்பாடு, முதலாளித்துவ கலாச்சார ஆதிக்கம் போன்ற இன்னோரன்ன காரணிகளைக் குறிப்பிடலாம். பொதுவாகச் சொன்னால், இந்தக் குற்றங்களின் விளைநிலமாக ஏற்றத்தாழ்வான முதலாளித்துவ சமூக அமைப்பு இருக்கின்றது எனச் சொல்லலாம்.

இந்த நிலைமையில், சமூகத்தின் உள்ளே புரையோடிப் போயிருக்கின்ற புற்றுநோய்க்கு வைத்தியம் செய்யாமல், வெளியே தெரிகின்ற புண்ணுக்கு வைத்தியம் செய்வது போன்றதே, இவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக என்று சொல்லிக்கொண்டு, மேலும் மேலும் பொலிஸ் நிலையங்களைத் திறக்க எண்ணுவது. இது புண்ணுக்கு சரியான வைத்தியம் செய்து அதை முற்றாக ஆற்றுவதற்குப் பதிலாக, புண்ணை மறைப்பதற்கு பவுடர் பூசுவது போன்றது.

அதுமாத்திரமின்றி, இந்தப் பொலிஸ் நிலையங்கள் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதாகச் சொல்லிக்கொண்டு, மக்கள் மீது அடக்குமுறை வலையமைப்பு ஒன்றை உருவாக்கவே இறுதியில் பயன்படப் போகின்றன. அத்துடன், இந்தப் புதிய பொலிஸ் நிலையங்களின் செயற்பாட்டுக்கு மக்களின் வரிப்பணத்திலிருந்தே படியளக்கப்படப் போகின்றது.

“நாட்டில் கல்விக்கூடங்கள் அதிகம் திறக்கப்படும்போது, சிறைச்சாலைகள் தானாகவே மூடப்படும்” என்று யாரோ ஒருவர் சொன்னதுதான், இந்த நேரத்தில் ஞாபகத்துக்கு வருகின்றது.

– சூரி

# இது அவமானம்!

சங்கானை நிச்சாமம் கிராமத்தில் அமைந்துள்ள சரஸ்வதி சனசமூக நிலைய 60 ஆவது ஆண்டு விழாவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதாகச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

இதைப் பார்த்த பொழுது அவமானமும், ஆத்திரமும்தான் ஏற்பட்டது. ஏனெனில், முழுக்க முழுக்க தாழ்த்தப்பட்ட மக்கள் மக்கள் வாழும் நிச்சாமம் கிராமம் தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தில் தலைமைக் களமாக இருந்து வீரகாவியம் படைத்த கிராமமாகும். சாதியமைப்புக்கு எதிரான போராட்டத்தில் நிச்சாம மக்கள் பலர் இரத்தம் சிந்தியதுடன், சிலர் தமது இன்னுயிரையும் ஈந்திருக்கின்றனர்.

1966 ஒக்ரோபர் 21இல் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியால் ஆரம்பித்து வைத்த தீண்டாமைக்கு எதிரான புரட்சிப் போரில், நிச்சாமம் கிராமம் எதிரிகளான சாதி வெறியர்களால் அணுக முடியாத கோட்டையாகத் திகழ்ந்த வரலாறு சரித்திரத்தில் பொறிக்கப்பட்ட ஒன்றாகும்.

அந்தப் போராட்டங்களின் போது, மக்கள் ஒன்றுகூடித் தமது தீர்மானங்களை எடுத்த பொது அரங்காக அங்கு அமைந்துள்ள சரஸ்வதி சனசமூக நிலையமே திகழ்ந்தது. அத்தகைய ஒரு பெருமைமிக்க நிலையத்தின் 60ஆவது ஆண்டு விழாவுக்கு சாதி வெறியர்களின் கூடாரமான பிற்போக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சரவணபவனை பிரதம விருந்தினராக அழைப்பது எவ்வளவு அவமானம்? அதுவும் 60களில் நடைபெற்ற தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தில் இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான தமிழரசுக் கட்சியும், அதன் செயலாளரான அ.அமிர்தலிங்கமும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக நின்றதால், அடுத்து வந்த (1970) தேர்தலில் அமிர்தலிங்கத்தைத் தோற்கடிப்பதில் நிச்சாமம் மக்கள் பெருமைக்குரிய முக்கிய பாத்திரத்தை அல்லவா வகித்தார்கள். அப்படியான மகிமைமிக்க மண்ணுக்கு தமிழரசுக் கட்சியின் வாரிசு ஒருவரை பிரதான விருந்தினராக அழைப்பது எவ்வளவு வெட்கக்கேடு!

அதுவும் தமிழ் மக்களின் பணத்தை வகைதொகையின்றிச் சூறையாடிய ‘சப்றா’ என்ற நிதி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக இருந்தவரும், தனது பண பலம், பத்திரிகை பலம் என்பனவற்றுடன், வேறு உத்திகளைக் கையாண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றவருமான ஈ.சரவணபவனை பிரதம விருந்தினராக அழைப்பது என்பது, எமது கண்ணை நாமே குத்தும் செயலல்லவா?

1966 ஒக்ரோபர் 21 எழுச்சியின் 50ஆவது ஆண்டு நிறைவை இலங்கையிலும், உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் தாழ்த்தப்பட்ட மக்களும், முற்போக்கு சக்திகளும் கொண்டாடும் இவ்வேளையில் இப்படியொரு கேவலத்தை நிச்சாம மக்களின் இன்றைய சந்ததி செய்வது அவமானத்துக்கு உரியதும், மன்னிக்க முடியாத குற்றமுமாகும்.

*–கபிலன் (பாரிஸ்)*

---

11ம் பக்கத்தொடர்ச்சி…

சுதந்திரக் கட்சியையும், அதன் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுத்திரக் கூட்டமைப்பு என்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியையும் அழிக்க முயலும் ஏகாதிபத்திய, பிற்போக்குவாத சக்திகளுக்குத் துணை போவதாலுமே உங்களை கட்சி உறுப்பினர்களும், மக்களும் வெறுக்கிறார்கள்.

இந்த உண்மையை நீங்கள் புரிந்து கொள்ளாதவரை, உங்கள் நிழலைக் கண்டே நீங்கள் பயப்படுவதுடன், வரலாற்றில் உங்கள் பாத்திரம் என்னவென்பதையும் மக்கள் தீர்மானிப்பர். *

# இனப் பிரச்சினைத் தீர்வை ஒரு வருடத்துக்கு ஒத்தி வைத்தார் சம்பந்தன்!

தற்போதைய மைத்திரி — ரணில் 'நல்லாட்சி' அரசைப் பதவிக்குக் கொண்டு வந்ததில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முக்கிய பங்கு வகித்தது என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. கூட்டமைப்பின் கைங்கரியத்துக்கு போனசாக சந்தர்ப்பவசத்தால் அதற்கு எதிர்க்கட்சிப் பதவியும் கிடைத்தது. அதற்குக் கைமாறாக கூட்டமைப்பு உலகில் எங்கும் இல்லாத புதுமையாக ஆளும் அரசாங்கத்தின் தொங்கு சதையாக தொங்கிக் கொண்டு இருக்கிறது. (இந்தப் பதவி முன்னைய மகிந்த ஆட்சியில் கிடைத்திருந்தால் நாடாளுமன்றத்திலும், உலகம் முழுவதும் சுற்றியும் அவ்வரசை நார்நாராகக் கிழித்து வீரம் காட்டியிருப்பார்கள்)

எதிர்க்கட்சி என்ற வகையில் கூட்டமைப்பு, இன்றைய அரசாங்கம் எடுத்து வரும் மக்கள் விரோத, தேச விரோதச் செயல்பாடுகளை ஒருமுறையேனும் கண்டித்தது கிடையாது. அதுதான் போகட்டும், தமிழ் மக்கள் பிரச்சினையிலாவது அரசுக்கு நெருக்கடி கொடுக்கிறார்களோ என்றால் அதுவும் கிடையாது.

மாறாக "அரசாங்கம் இந்த ஆண்டுக்குள் தமிழர் பிரச்சினையைத் தீர்த்துவிடும். அதுவரை யாரும் அதைக் குழப்பக்கூடாது" என்று திரும்பத் திரும்ப கூட்டமைப்புத் தலைமை (சம்பந்தன் – சுமந்திரன் குழு) கூறி வந்தது. அண்மையில் கூட வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் கூட்டத்தில் பங்குபற்றிய கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரன் ஆதரவாளர்களின் அதிருப்தியைப் போக்குவதற்காக, "இன்னும் ஒரு இரண்டு மாதம் தானே அவகாசம் கேட்கிறோம். அதற்குள் அரசாங்கம் பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் அடுத்து என்ன செய்கிறோம் என்று இருந்து பாருங்கள். அப்படியில்லாமல் என்னைத் துரோகி என்று நீங்கள் நினைத்தால் (கூட்டாளி சம்பந்தனை ஏன் விட்டாரோ தெரியவில்லை) அமிர்தலிங்கம், நீலன் திருச்செல்வம் போன்றோரைச் சுட்டுக் கொன்றது போல என்னையும் சுட்டுக் கொல்லுங்கோ" என ஆவேசமாகவும், உருக்கமாகவும் பேசினார்.

ஆனால் சுமந்திரனின் சவாலுக்கு ஆப்பு வைத்திருக்கிறார் அவரது சகபாடி சம்பந்தன். அண்மையில் பிரதமர் ரணில் அலரி மாளிகையில் ஏற்பாடு செய்த தேசிய தீபாவளிக் கொண்டாட்டத்தில் பங்கேற்ற சம்பந்தன், "மைத்திரி — ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தில் எமக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. எப்படியும் அடுத்த தீபாவளிக்கு முன்னர் அவர்கள் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பார்கள் என நாம் நம்புகின்றேம்" எனத் திருவாய் மலர்ந்திருக்கிறார். அதாவது முன்னைய ஓராண்டு காலகெடு முடிந்து இன்னொரு ஆண்டு கால அவகாசம் அரசுக்கு வழங்கியிருக்கிறார் 'தமிழினத் தலைவர்' சம்பந்தன்.

அவர்களுக்கென்ன, எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவியினால் வரும் சலுகைகளை அனுபவித்துக் கொண்டு, போதாததிற்கு அரச ஆதரவால் வரும் வரப்பிரசாதங்களையும் அனுபவித்துக் கொண்டு, அரசாங்கம் நடாத்தும் ஒவ்வொரு தீபாவளிக் கொண்டாட்டத்தின் போதும், "அடுத்த தீபாவளிக்குள் தீர்வு" என்று சொல்லிச் சொல்லிக் காலத்தைக் கடத்திவிடுவார்கள். தொடர்ந்தும் தொடர்ந்தும் ஏமாறப் போவது இந்தச் சோணகிரித் தமிழனல்லவா?

**- சந்திரன்**

# அஞ்சலி!

புரட்சிகரப் பாரம்பரியத்தில் ஊறிய மட்டுவில் மானாவளைக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கிளிநொச்சி திருவையாறு படித்த வாலிபர் திட்டத்தின் 2ஆம் இலக்க வீடடை வசிப்பிடமாகக் கொண்டவருமான தோழர் சின்னத்தம்பி சந்திரன் அண்மையில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோழர் சின்னத்தம்பி சந்திரன் தனது இளமைக்காலத்தில் இருந்தே தனது கிராமம் முன்னெடுத்த தீண்டாமைக்கும், சாதி அமைப்புக்கும் எதிரான போராட்டத்தில் ஈடுபாடு கொண்ட ஒருவராவார். திருவையாறில் குடியேறிய பின்னர் 1960களின் நடுப்பகுதியில் இருந்து கிளிநொச்சிப் பிரதேசத்தில் செயல்பட ஆரம்பித்த புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியுடன் தன்னையும் இணைத்துக் கொண்டதுடன், அக்கட்சியின் தலைமையிலான அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் திருவையாறு கிளையை உருவாக்குவதிலும், அதைச் செயல்படுத்துவதிலும் முக்கிய பங்கையும் ஆற்றியிருந்தார்.

தோழர் சந்திரனின் மறைவையொட்டி எமது புரட்சிகர அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**– தோழர்கள் மற்றும் நண்பர்கள்**

---

முன்பக்கத்தொடர்ச்சி...

மறைக்க முற்படுவது போல மறைக்க முயற்சிக்கின்றனர்.

ஐ.தே.க. தலைமையிலான அரசாங்கத்தின் இந்த மாதிரியான நடவடிக்கைகளை ஜனாதிபதிப் பதவியில் குந்தியிருக்கும் 'திருவாளர் பரிசுத்தம்' மைத்திரிபால சிறிசேன கண்டும் காணாமல் இருப்பது அவரது சிறீ.ல.சு.கட்சியினர் மத்தியிலும் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதி பதவிக்கு வந்த நாள் முதலாய் கட்சிக்குள் இருந்த முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவானவர்களை சட்டவிரோதமாக நீக்கி, தனக்கு வேண்டியவர்களை கட்சிப் பதவிகளில் அமர்த்தி, கட்சியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு மைத்திரியும், அவரது வழிகாட்டியான சந்திரிகவும் எடுத்த அனைத்து முயற்சிகளும் தோல்வி கண்டுள்ளன.

ஒட்டு மொத்தத்தில் தற்போதைய 'நல்லாட்சி' அரசாங்கம் சகல துறைகளிலும் தோல்வியைத் தழுவியுள்ளது. அதன் காரணமாக இந்த அரசாங்கத்தைப் பதவிக்குக்

கொண்டு வந்த பங்காளிக் கட்சிகள் மத்தியில் அரசுக்கு எதிரான போக்குகள் வளர ஆரம்பித்துள்ளன.

பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஜே.வி.பியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹந்துநெத்தி தலைமையிலான 'கோப்' விசாரணைக் குழுவே முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ச்சுனா மகேந்திரனுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்து அவரைக் குற்றவாளியாகக் கண்டது. ஆனால் அரசாங்கம் இதுவரை அவர் மீது நடவடிக்கை எதுவும் எடுக்காததினால், ஜே.வி.பி. அரசாங்கத்தின் மீது அவநம்பிக்கையை வெளியிட்டதுடன், வேறு பல விடயங்களிலும் அரசாங்கத்தின் செயலற்ற தன்மையையும் சுட்டிக்காட்டி, இந்த அரசாங்கம் இனியும் பதவியில் இருக்கத் தகுதியில்லை என அறிவித்துள்ளது.

இன்னொரு பங்காளிக் கட்சியான ஹெல உருமய, அரசாங்கம் தேர்தல் காலத்தில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதி எதனையும் நிறைவேற்றாதபடியால், தாம் அரசாங்கத்திலிருந்து விலகிக் கொள்ளப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

மறுபக்கத்தில் இந்த அரசாங்கம் பதவிக்கு வருவதில் முக்கிய பங்கு வகித்த முஸ்லீம் கட்சிகளும் அரசாங்கத்தின் மீது பலத்த அதிருப்தியில் இருக்கின்றன. அதற்குப் பிரதான காரணம் புதிதாகக் கொண்டுவரப்பட்டுள்ள அரசியல் சாசனத்தில் முஸ்லீம் மக்களின் நீண்டகால கோரிக்கையான அதிகாரப் பகிர்வு குறித்து எதுவுமே சேர்க்கப்படவில்லை என்பதாகும். அதுமாத்திரமின்றி, ஐ.நாவின் யுனெஸ்கோவில் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனத்தில் இஸ்ரேலிய சியோனிச அரசாங்கம் மேற்கொள்ளும் கலாச்சார அழிப்பு நடவடிக்கைகளைக் கண்டித்துக் கொண்டு வரப்பட்டு ஏகப் பெரும்பான்மையான நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இலங்கை பங்குபற்றாமல் ஒதுங்கியிருந்து இஸ்ரேலுக்கு ஆதரவாக நடந்து கொண்டது முஸ்லீம் மக்கள் மத்தியில் அரசின் மீது கடும் கோபத்தை ஏற்படுத்தி உள்ளது.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையிலும் கூட அரசின் மீதான நம்பிக்கை தகர்ந்து போயுள்ள நிலையே உருவாகியுள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும், நாடாளுமன்றத் தேர்தலின் போதும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமது வர்க்க விசுவாசம் காரணமாக இந்த அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளுக்கு நிபந்தனையின்றி ஆதரவு வழங்கியதோடு, இந்த அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சமஸ்டி அடிப்படையிலான தீர்வொன்றை வழங்கும் என்றும் கூறி வந்தது. ஆனால் இந்த அரசாங்கமும் ஏற்கெனவே நடைமுறையில் இருக்கும் இந்திய – இலங்கை ஒப்பந்த அடிப்படையிலான மாகாணசபைகளுக்கு மேலால் எதையும் செய்யப் போவதில்லை என்பது தற்பொழுது தெளிவாகியுள்ளது. அதன் காரணமாக தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் இனத் தீவிரவாதம் தலையெடுக்கும் சூழல் தோன்றியுள்ளது.

இனப் பிரச்சினைத் தீர்வு ஒருபுறமிருக்க, இராணுவத்தினர் வசமுள்ள காணிகளை விடுவித்தல், தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்தல், சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளைப் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்தல், காணாமல் போனோரைக் கண்டறிதல் அல்லது அவர்களது குடும்பங்களுக்கு போதிய நஸ்டஈடு வழங்குதல், இடம் பெயர்ந்தோரின் மீள் குடியமர்வு, யுத்தத்தால் பாதிக்கப்படடோருக்கான புனர்வாழ்வு போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளிலும் தற்போதைய அரசாங்கம் உருப்படியான காரியம் எதனையும் செய்யவில்லை என்ற அதிருப்தியும், அவநம்பிக்கையும் தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக நிலவுகின்றது.

இந்த நிலைமையில், இந்தப் பிரச்சினைகளை மையமாக வைத்து ஆளும் கூட்டணியின் இரண்டு பிரதான கட்சிகள் மத்தியிலும் நாளுக்குநாள் விரிசல் அதிகரித்து வருகிறது. அதன் பிரதிபலிப்பையே ரணில் தலைமையிலான அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ஜனாதிபதி மைத்திரி அண்மையில் பகிரங்கமாக விமர்ச்சித்த சம்பவம் எதிரொலித்தது. முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் மகேந்திரன் விவகாரத்திலும் அரசியல்வாதிகளின் தலையீடு இன்றி விசாரணை நடாத்தப்படும் என ஜனாதிபதி அறிவித்ததும், ரணில் தரப்பினருக்கு விடுத்த எச்சரிக்கையாகவே கருதப்படுகிறது.

இதன் காரணமாக இரண்டு கட்சிகளும் தமது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து இரகசிய மந்திராலோசனைகளில் இறங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது. முரண்பாடு தீவிரமடைந்து இரண்டு கட்சிகளும் பிரிய வேண்டிய நிலைமை ஏற்பட்டால், எந்தெந்தக் கட்சிகளைச் சேர்த்துக் கொண்டு தமது தலைமையிலான அரசாங்கத்தை நிறுவலாம் என்பதில் இரு கட்சியின் தலைமைப்பீடங்களும் அக்கறையுடன் ஆராய்ந்து வருவதாக உள் தகவல்களை அறிந்தவர்கள் மூலம் அறிய வருகிறது.

தமக்குச் சார்பான தற்போதைய அரசாங்கத்தைப் பதவிக்குக் கொண்டு வந்த மேற்கத்தைய சக்திகள் இந்த அரசாங்கம் வீழ்வதை ஒருபோதும் விரும்பமாட்டார்கள் என்பதுடன், என்ன விலை கொடுத்தும் இந்த அரசைப் பாதுகாப்பதில் பகீரதப் பிரயத்தனம் எடுப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதேநேரத்தில் இலங்கையின் ஆட்சி மாற்றங்களில் எப்பொழுதுமே நேரடிச் செல்வாக்குச் செலுத்தும் இந்தியாவின் நிலைப்பாடு எவ்வாறு இருக்கும் என்பதிலேயே இலங்கையின் எதிர்காலம் தங்கியுள்ளது.

எதுஎப்படியிருப்பினும், அடுத்த ஆண்டில் இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றம் ஏற்படக்கூடிய திசையை நோக்கியே அரசியல் நிலவரங்கள் சென்று கொண்டிருக்கிறன என்பதே பெரும்பாலானவர்களின் கருத்தாக இருக்கின்றது. *

### கியூபாவின் உதாரணம்:

# உறுதியாக நின்றால் வெற்றி நிச்சயம்!

அமெரிக்காவின் கோடிக்குள் இருக்கும் சின்னஞ்சிறு சோசலிச கியூபா மீது அது உருவான 1959ஆம் ஆண்டு முதல் உலகின் முதல்தர வல்லரசான அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்து, அதைப் பேணி வருகிறது. அந்தத் தடையை நீக்கக்கோரி சில ஐரோப்பிய நாடுகள் உட்பட உலகின் பெரும்பான்மையான நாடுகள் வேண்டுகோள் விடுத்தும், ஐ.நாவில் தீர்மானங்கள் நிறைவேற்றியும் கூட, அமெரிக்கா தனது பிடிவாதத்தைத் தளர்த்தாமலே இருந்து வருகிறது.

இந்த நிலையில், பராக் ஒபாமா அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அமெரிக்க – கியூப உறவுகளைச் சீர்செய்வதற்கு கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் சில நடவடிக்கைகளை எடுத்தார். முக்கியமாக இருநாடுகளுக்கும் இடையில் பூரணமான இராஜதந்திர உறவுகளை மீளவும் ஏற்படுத்தியதுடன், கியூபாவுக்கு எதிரான சில தடைகளையும் நீக்கினார். அத்துடன் கடந்த 57 வருடங்களில் முதற்தடவையாக ஒரு அமெரிக்க ஜனாதிபதி என்ற வகையில் இவ்வாண்டு கியூபாவுக்கான உத்தியோகபூர்வமான விஜயம் ஒன்றையும் மேற்கொண்டார்.

இருந்தும் கியூபா மீதான பொருளாதாரத் தடையை அமெரிக்கா நீக்கவில்லை. இந்த நிலைமையில் வழமைபோல கியூபா மீதான பொருளாதாரத் தடையை நீக்கக்கோரி அண்மையில் ஐ.நாவில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்தத் தீர்மானத்தை ஐ.நாவில் உள்ள சுமார் 200 நாடுகளில் 190 நாடுகள் ஆதரித்து வாக்களித்தன.

வழமையாக இப்படியான தீர்மானத்தை அமெரிக்கா எதிர்த்து வாக்களிப்பது வழமை. ஆனால் இம்முறை அமெரிக்கா தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்காமல் ஒதுங்கி நின்று கொண்டது. வழமையாக அமெரிக்காவுடன் சேர்ந்து எதிர்த்து வாக்களிக்கும் அமெரிக்காவின் செல்லப்பிள்ளையான இஸ்ரேலும் இம்முறை வாக்கெடுப்பில் பங்கு கொள்ளவில்லை. இது ஒரு முக்கிய நிகழ்வாக அனைவராலும் பார்க்கப்படுகிறது. ஒபாமா இவ்வருட இறுதியில் ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார். இந்த நிலைமையில் சர்வதேச அரங்கில் அவர் மேற்கொண்ட முக்கியமானதும், இறுதியானதுமான நிகழ்வாக இது நோக்கப்படுகிறது.

எதுஎப்படியிருப்பினும், சின்னஞ்சிறு கியூபா கடந்த 57 வருடங்களாக அமெரிக்கா தலைமையிலான மேற்கு முதலாளித்துவ நாடுகளின் சகலவிதமான சுற்றிவளைப்புகளுக்கும் தலை வணங்காது உறுதியுடன் நின்று பிடித்ததின் விளைவே தற்பொழுது அதற்குக் கிடைத்துள்ள சர்தேச அங்கீகாரத்துக்குக் காரணமாகும்.

# சுதந்திரப் போராளிகளை "தேசத் துரோகிகளாக" குறிசுட்ட பிரித்தானிய ஏகாதிபத்தியம்!

ஒரு காலத்தில் 'சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்ஜியம்' என்ற பெயருடன் உலகம் முழுவதையும் கட்டியாண்ட பிரித்தானிய ஏகாதிபத்தியம், இன்று பல்லுக் கழன்ற கிழட்டுச் சிங்கமாகிவிட்ட போதிலும், சில விடயங்களில் தனது பழைய காலனியாதிக்க நடவடிக்கைகளின் சின்னங்களை இன்றும் பேணிப்பாதுகாத்து வருகின்றது.

இலங்கையை பிரித்தானியர் ஆக்கிரமித்த காலத்தில், மத்திய மலைநாட்டில் இருந்த சிறீ விக்கிரம இராஜசிங்கன் தலைமையில் இருந்த கண்டி இராஜ்ஜியமும், வடக்கே வன்னி பெரு நிலப்பரப்பில் இருந்த பண்டார வன்னியன் தலைமையிலான வன்னி இராஜ்ஜியமும் அவர்களை எதிர்த்து இறுதிவரை போரிட்டன.

கண்டி இராஜ்ஜியத்தில் போரிட்ட பல தேசபக்தர்களை பிரித்தானியர் கைது செய்து தூக்கிலிட்டுக் கொலை செய்ததுடன், அவர்களைத் "தேசத் துரோகிகள்" எனவும் வரலாற்றில் பதிவு செய்து வைத்தனர்.

அப்படி பிரித்தானியருக்கு எதிராகப் பேரிட்ட 19 பேரினது பெயர்களைத் "தேசத் துரோகிகள்" என முத்திரை குத்தி 1918 ஜனவரி 10ஆம் திகதி தாம் வெளியிட்ட பிரித்தானிய முடியரசின் வர்த்தமானியில் அறிவித்தனர். அவர்களது பெயர்கள் வருமாறு:

கெப்பிட்டிப்பொல திசாவ, கொடகெதர திசாவ, கெட்டகெலே மொகொட்டல, கத்தரகம மகா பெத்மரல, கத்தரகம குட பெத்மரல, பல்லேகல்ல மொகெட்டல, பட்டகெல மொகட்டொல, டெல்ககெதர ரெகனேரல, பொசர வட்டே விதானே, கியுலே கெதர மொகொட்டல, யலகோம்மி மொகொட்டல, உடமெதுர மொகொட்டல, கொகுகம்பிரே ரெட்ரேரல, கொகுகம்ரே வளவ மொகொட்டல, புத்துவே ரட்ரேரல, பகினிககவெல ரட்ரேரல, மகா படுல்லேகமமானே ரெட்ரேரல, பலுபிட்டடிய மொகொட்டல, பல்லே மலகாயே கமாதிரல்ல ஆகியோராகும்.

அந்நிய ஆதிக்கத்தில் இருந்து நாட்டை விடுவிப்பதற்காகப் போராடிய இந்தத் தேசபக்தர்கள் மீது பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் குத்திய "தேசத் துரோகிகள்" என்ற அவதூறை நீக்கி, அவர்களைச் சுதந்திரப் போராளிகளாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஆளும்கட்சி உறுப்பினர் ஒருவர் அண்மையில் நாடாளுமன்றத்தில் எழுப்பி இருக்கிறார்.

தற்போது பதவியில் இருக்கும் மைத்திரி – ரணில் தலைமையிலான மேற்கத்தைய சார்பு அரசாங்கம் இந்த உறுப்பினரின் கோரிக்கையைச் சாதகமாகப் பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளுமா அல்லது நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் கடந்த 70 வருடங்களாக பதவியில் இருந்த முன்னைய அரசுகள் பாராமுகமாக இருந்தது போல இருந்து கொள்ளுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அடுத்த ஆண்டு பெப்ருவரி 4ஆம் திகதி நாடு 70ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாட இருக்கின்ற வேளையில், பிரித்தானியர் எமது மண்ணின் மைந்தர்கள் மீது சுமத்திய அவப்பெயரை நீக்கும்படி கோரி அனைத்து மக்களும் குரல் எழுப்ப வேண்டியது தேசியக் கடமையாகும்.